# திராவிடநாடு

மலர் 6 | 12-10-47 | இதழ் 20


## எப்படி ஒப்புக்கொள்வது?

—※—

" ஒருவருக்கொருவர் அன்றாட வயிற்றுப் பிழைப்புக்காகச் சண்டை செய்து கொண்டும், இது போன்ற மற்றக்காரியங்களுக்காக ஒரு தேசத்தை மற்றொருதேசம் அடிமைப்படுத்த யுத்தங்கள் செய்வதுமான காரியங்கள் உலக மெங்கும் நிகழ்ந்துகொண்டும் இருக்கும் பொழுது, கடவுள் நமதுபிதா என்பதையும் நாமெல்லோரும் அவருடைய மக்களான சகோதரர்கள் என்பதையும் என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. "

—ஜார்ஜ் லான்ஸ்பரி.

16-ம் பக்கத் தொடர்ச்சி

களை விட்டுத் தொலைக்காமல் அதனை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டு வேதனைப்படுகின்றனர். கல்வி கற்ற பின்னரும், ஏன், அவர்கள் இந்நிலையில் உள்ளனர்? இதனை மாற்ற மார்க்கம் இல்லையா?

முன்னேற்றத்தைத் தடுக்கும் தடைகள்பல, கற்காலத்தில் இருந்தது போலவே, இந்நாகரிககாலத்திலும்சில குறைபாடுகள் உள்ளன. எல்லா நாகரிகத்திலும் மனிதனே நடு நாயகமாக இருக்கிறான். ஒரு தனிப்பட்டவன், மற்ற மக்களோடும், கூட்டத்தோடும், சமுகத்தோடும் கொண்டிருக்கும் தொடர்பு எத்தகையது என்பதே அடிப்படைக் கொள்கையாகும். இத்தொடர்பு என்றும் மாறிக்கொண்டே இருக்கிறது—மாறக் கூடியது. ஒரு காலத்தில்மனிதன், சிலரிடமே, அதாவது சிறு குடும்பத்தினிடமும், மற்றும் தம்மினத்தைச் சேர்ந்தவர்களிடமுமே பழகிவந்தான். தான் உயிரோடு இருப்பதற்கு உதவின நிலம், நீர், காற்று முதலியவற்றோடும் உறவு கொண்டிருந்தான். இன்றும் அவன் இயற்கையோடு தொடர்பு கொண்டிருந்தபோதிலும், அவன் உழைப்பை இலகுவாக்கி இன்பத்தைத் தரும் பற்பல நவீன சாதனங்களோடு அவன் உறவுகொள்ள வேண்டியவனாக மாறிவிட்டான். புதுப் புதுக் கருவிகளின் பெருக்கத்தால் பழையன மறைந்த அளவிற்கு, அவனுடைய இருதயமும், மனமும் விரிவடையவில்லை.

முன்னோர்கள் ஏற்படுத்திய உலகத்தைத் தமதாக்கிக் கொள்ளவும், புதிய உறவு முறையை அமைத்துக் கொள்ளவும் எல்லாக் காலங்களிலும் கல்விக்கு ஊக்கம் காட்டப் பட்டு வந்தது. எனவே, கல்வி, மனித சமுகத்தின் முக்கிய நிறுவனமாயிற்று. ஆதலால் ஒரு குறிப்பிட்ட சமுகத்தின் லட்சியமும் தேவையும், அந்தச் சமுகத்தின் கல்வி முறையை நிர்ணயிக்கும் சக்தியாக இருந்தது—இருக்கிறது.

மனிதனால் கட்டுப்படுத்த முடியாது போகுமானால், இயந்திர நாகரிகத்தால் ஏற்படும் கேடுகளை, இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் அறிஞர்கள் சிந்திக்கத் தொடங்கினர். நவயுகப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குத் தகுதியான கல்வி முறையை இளைஞர்களுக்களிக்க முயற்சி எடுத்தனர்.

சென்ற போரின் விளைவாக அந்த நம்பிக்கை சிதைவுற்றது. நாகரிக உலகின் வியாபாரக் கொள்கையும், அரசியல் அமைப்பும், பலமே நீதி எனும் போக்கும், சுயநன்மைப் பாதுகாப்பும், சுயநலத் தத்துவமும் இரண்டு பெரும் போர்களுக்கும் காரணமாக இருந்ததைக் கண்டனர். தொழில் துறையிலும் விஞ்ஞானத் துறையிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திற்குச் சரி சமமாக, அநாகரிக மக்களின் பயங்கொள்ளித்தனமும் வெறுப்புணர்ச்சியும் மக்களிடையே ஆழ வேரூன்றி இருப்பதைப் பார்த்தனர். இவைகளிலிருந்து மக்களை, மக்களாக மாற்ற முடியாதா? அதற்கான வகை என்ன?

அச்சம், வெறுப்பு முதலிய உணர்ச்சிகளிலிருந்து மக்களை விடுதலை செய்ய வேண்டும். இதுவே தற்காலத்தியகல்வியின் இலட்சியமாகும். இதற்கு நமது குழந்தைகளைப் பக்குவப் படுத்த வேண்டும். நமது குழந்தைகளிடம் இயற்கையாக அமைந்துள்ள சிருஷ்டி ஆர்வத்தை நாம் நன்கு தெரிந்து கொள்வது முக்கியமாகும்.

குறைந்த அளவிற்கு ஏற்பட்டுள்ள மனிதவளர்ச்சியிலும் கூட, மனிதனின் நடவடிக்கைகளை உருவாக்குவதில் சூழ்நிலை பிரதான பங்கு கொண்டிருப்பதைப்பார்க்கிறோம். எனவே, எது குழந்தை? அதன் இயல்பு என்ன? அது, எதனைச்செய்ய விரும்புகிறது? அதனை, உலக மக்களுடன் ஒத்துப் போவதற்குத் தகுதியுள்ள பிரஜையாக எப்படி மாற்றுவது? என்பன போன்றவற்றில் கருத்தைச் செலுத்த வேண்டும்.

ஆராய்ந்து பார்க்குமிடத்து இன்றுள்ள போதனா முறையும் பாட முறையும் பயனற்றுப் போனதைக் காண்கிறோம். கேடு விளைவிப்பதையும் உணருகிறோம். ஆசிரியரின்பிரம்

(5-ம் பக்கம் பார்க்க)

13-ம் பக்கத் தொடர்ச்சி

தமது அறிக்கையில், திருவாங்கூர் சமஸ்தான காங்கிரசும், திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸும் ஒரு உடன்பாட்டிற்கு உடனடியாக வந்தாக வேண்டுமென்றும் அப்படி ஏற்பட இடமில்லாது தகராறு வலுத்தால், பிரச்னையை அகில இந்திய சமஸ்தான மக்கள் மகாநாட்டின் மத்தியஸ்தத்திற்கும் விட வேண்டுமென்றும் குறிப்பிடுகிறார். நிலைமை எவ்வளவு தூரம் போய்விட்டதென்பதை மலையாளிகளும் மற்றவர்களும் நன்கு உணராமலிருப்பது வருந்தத் தக்கதே.

தென்—திருவாங்கூரில் தமிழரிடையே பெரிய மனக் கொதிப்பு ஏற்பட்டிருக்கிறதென்பதையும் அதைத் தீர்க்கா விட்டால் திருவாங்கூருக்கும், கேரளத்திற்கும், தமிழ்நாட்டிற்கும் ஆபத்து ஏற்படுமென்று திரு. நம்பூதிரிபாட் சொல்லியிருப்பதும் கவனிக்கவேண்டிய பிரச்னை. இந்தத் தகராறைத் தீர்த்து வைப்பதற்கான பல நல்ல யோசனைகளையும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த யோசனைகளில் முதலாவதாகக் குறிக்கப்பட்டுள்ள, கேரளமாகாணம் (மலையாளமாகாணம்) ஏற்படும்போது திருவாங்கூரிலுள்ள தமிழ்ப் பிரதேசங்கள் தமிழ் நாட்டோடு போய்ச் சேர்வதற்கு அனுமதியளிக்கப்படுமென்று திருவாங்கூர் சமஸ்தான காங்கிரஸ் எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாத முறையில் தெளிவாகச் சொல்லி விட வேண்டுமென்பதேயாகும் என்பதை மீண்டும் ஞாபகப்படுத்திக் கொள்கிறோம்.

15-ம் பக்கத் தொடர்ச்சி

கையகன்று ஓடினார்களாம். கையன்று என்பதற்கு, அப்பேய் வடிவத்தைக் கண்ணுற்ற அதே விநாடியிலேயே, அதனை ஒரு சிறிதும் காணப்பெறாமல் அச்சங்கொண்டு, உடனே அந்த இடத்தை விட்டு ஓடி விடுவோர்கள் என்பது பொருளாகும். காண்பவர்கட்கு அச்சத்தையும் நாணத்தையும் தரக்கூடிய அளவுக்கு அந்த அம்மையாரின் பேய் வடிவம் அமைந்திருந்ததென்றால், அதனைக் காட்டுமிராண்டித்தனம் என்று கூறாமல், கடவுளின் அருட்டிறமென்று கூறுவது! இப்படி ஒரு பெண்ணைப் பேயாக்கி மகிழும் பெம்மான் எமக்கு வேண்டாமென்றன்றோ இந்நிகழச்சியைப் படிக்கும் அறிவுடையோர் கருதுவர். பெறற்கரிய மக்கட் பிறப்பைப் பெற்றும், ஒரு பெண், பெண்ணாகவே இருந்து வாழவிடாமல், அவளைப் பேயாக்கி, மக்களினத்துக்கே மாறாத மாசை உண்டாக்கும் புராணங்களை மன்பதையில் இனியும் விட்டு வைப்பது முறையாகுமா என்பதை எண்ணிப் பாருங்கள்.

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

விலை 2 அணா | திராவிடநாடு | ஆண்டுசந்தா ரூ 7

# பெண்ணைப் பேயாக்கிய பெம்மான்

[நக்கீரன்]

காரைக்காலில்இருந்த தனதத்தன் என்ற வணிகனுக்குப் புனிதவதியார் என்றொரு புதல்வி இருந்தாள். நாகபட்டினத்தில் இருந்த நிதிபதி என்ற வணிகனுக்குப் பரமதத்தன் என்றொரு புதல்வன் இருந்தான். புனிதவதிக்கும் பரமதத்தனுக்கும் திருமணம் நடந்தது. புனிதவதி சிவனிடத் தன்புடையவளாதலால், சிவனடியார்களுக்கு உணவூட்டி மகிழும் பணியை மேற்கொண்டிருந்தாள். ஒரு நாள், பரமதத்தனைக் காண வந்தவர்கள், இரண்டு மாங்கனிகளைக் கொடுத்துச் சென்றனர். அவற்றை அவன் தன் இல்லத்துக்குக் கொடுத்தனுப்ப, இல்லாள் வாங்கி அவற்றை ஓரிடத்தில் வைத்தாள். அப்போது, ஒரு அடியவர் அங்குவர, அவருக்கு உணவளிக்க விரும்பிய புனிதவதி, சோறு மட்டும் சமைத்துக் கறி சமைக்கப்படாமல் இருந்ததால், கணவன் 'வைக்க' எனக் கொடுத்தனுப்பிய மாங்கனிகளில் ஒன்றை யெடுத்து அடியவருக்கு அன்னமிட்டாள். எஞ்சி இருந்த ஒரு மாங்கனியைக் கணவன் உணவருந்தியபோது அவனுக்குப் படைத்தாள். அதனையுண்ட பரமதத்தன், அதன் சுவைகண்டு மகிழ்ந்து, "இன்னொரு கனியையும் கொண்டு வா" என்றனன். புனிதவதி உள்ளே சென்று, ஆண்டவனை வேண்ட, அவர், ஒரு மாங்கனி அந்த மங்கைநல்லாள் கையில் இருக்கும்படி செய்தார். அதனை உண்ட பரமதத்தன், "என்னே இதன் சுவை! இது நான் அனுப்பிய மாங்கனியாய் இருக்குமோ? இராது. இதை நீ எங்கே பெற்றாய்?" என்று அம்மையாரைக் கேட்க, அம்மையார், "திருவருள் உதவிய திறத்தை வெளியிடலாமோ? கணவனுக்கு உண்மையைமறைத்தல் தவறன்றோ" என்ற நிலையில் நின்று கலங்கிப் பின்னர் நிகழ்ந்ததைக் கூறினாள்.

கடவுளிடம் நம்பிக்கை கொள்ளாத பரமதத்தன், "சிவனருளா? அங்ஙனமாயின், அவனருளால் இன்னுமொரு கனி கொணர்க" என்றனன். அங்ஙனமே ஒரு கனி அம்மையார் கைக்கு வந்து சேர்ந்தது. ஆனால், உடனே அக்கனி மறைந்துவிட்டது. அதுகண்ட பரமதத்தன், "இவள் தெய்வம்; இவளை விட்டு நீங்குதல் வேண்டும்" என்றெண்ணிப் பாண்டி நாட்டுக்குப் போய் அங்கொரு பெண்ணை மணந்து, அவளிடம் பிறந்த பெண்ணுக்குத் தன்னுடைய முதல் மனைவியின் பெயரான புனிதவதி என்ற பெயரைச் சூட்டினான்.

கணவனைப் பிரிந்து காரைக்காலில் இருந்த புனிதவதியார், பாண்டி நாட்டிலே தன் கணவன் இருக்கும் நிலைமையை அறிந்து அங்கு செல்ல, அவன் அவ்வம்மையாரைக் கடவுளாக எண்ணி வணங்கினான். கணவனால் கைவிடப்பட்ட புனிதவதி, கடவுளைத் தஞ்சமடைந்து, தன் வடிவத்தைப் பேய் வடிவாக்கிக்கொண்டு, கயிலாயத்தைக் காணுதல் வேண்டுமென்ற விருப்பத்தோடு, தலையால் நடந்து கயிலைமலைமீது ஏறினார். அதுகண்ட சிவன், "நம்பால் இங்கு வேண்டுவது என்ன?" என்று கேட்க, அம்மையார், "இறவாத இன்ப அன்பு வேண்டும்; பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல், உம்மை மறவாமை வேண்டும்; உம்முடைய நடனத்தைக் கண்டு மகிழ வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தாள். அதுகேட்ட சிவன், "திருவாலங்காட்டுக்குச் சென்று, அங்கு நம்முடைய நடனத்தைக் கண்டு இன்புறுக" என்று கூறி அம்மையாரை அனுப்பிவிட்டார். அம்மையார், மீண்டும் தலையாலேயே நடந்து, திருவாலங்காட்டை வந்தடைந்து, சிவனாரின் திருநடனங் கண்டு, பதிகம் பாடிப் பேறு பெற்றார் என்பதும் பெரிய புராண நிகழ்ச்சிகளில் ஒன்று.

இந்நிகழ்ச்சியில் பேசப்படும்புனிதவதியார் என்ற மங்கை, தன்னுடைய கணவன், வைத்திருக்கும்படிகொடுத்தனுப்பிய மாங்கனிகளில் ஒன்றை மகேசுவரனடியார் ஒருவருக்குக் கொடுத்துவிட்டதாகச் சொல்லப்படும் செய்தி, கணவனுடைய சொல்லுக்கு மாறாக நடந்துகொண்டாள் என்ற குற்றத்தை அந்த அம்மையார்மீது ஏற்றுவதாக இருக்கிறதென்று சிலர் கருதக்கூடும். அதினும், ஒருத்தி, தன் கணவனையே கடவுளாக மதித்து, அவன் சொல்லைச் சிரமேற்றாங்கி, அவனிட்ட கட்டளைப்படியே நடத்தல் வேண்டும் என்று கருதும் கடவுளன்பர்கள் தான் இதனைப் பெரும் குற்றமாகக் கருதுவர். ஆனால், கணவனைத் தன் வாழ்க்கைத் துணைவன்—வாழ்க்கையில் ஏற்படும் நலந் தீங்குகளில் பங்கு கொள்பவன் — இல்வாழ்க்கையை ஒழுங்காக நடத்திச் செல்வதில் தன் துணைவிக்கு மாறுபடாதவன்—கணவன் இல்லாத சமயத்தில், மனைவி, யாதாயினும் ஒரு இன்றியமையாத காரியத்தைச் செய்துவிட்டால், "நான் இல்லாமலும் என்னைக் கேளாமலும் ஏன் அந்தக் காரியத்தைச் செய்தாய்" என்று கடிந்து கொள்ளாதவன்—மனைவியைத் தன் வீட்டு வேலை செய்பவந்த அடிமை என்று எண்ணு

தவன் — இல்வாழ்க்கையில் தனக்கிருக்கும் உரிமை மனைவிக்கும் உண்டு என்று நினைப்பவன் என்ற இன்னபிற நல்லியல்புகளோடு கூடிய ஒருவனே இல்லாளுக்கு ஏற்ற இல்லாளன் என்று கருதும் அறிவுடையோர், புனிதவதியாரின் செயலைக் குற்றமாகக் கொள்ளார்.

இனிப், புனிதவதியாரின் இச்செயலைக் குற்றமாகக் கொள்ளவேண்டிய கடவுளன்பர்கள், அதனை ஏன் குற்றமாகக் கருதவில்லை என்பதே இந்நிகழ்ச்சியில் ஆராய்ந்து காணவேண்டிய உண்மையாகும். பரமதத்தன், தன் நண்பர்களால் கொடுக்கப்பட்ட மாங்கனிகள் இரண்டையும் ஒரு ஆளிடம் கொடுத்து, அவற்றைத் தனக்காக வைத்திருக்கும்படி சொல்லியனுப்புகிறான். இதனைச் சேக்கிழார்,

> "இல்லாளன் 'வைக்க' எனத் தம்பக்கல் முன்னிருந்த, நல்ல நறு மாங்கனிகள்........"

என்று கூறியுமுள்ளார். அப்படியிருந்தும், புனிதவதியார் அந்த மாங்கனிகளில் ஒன்றையெடுத்து, வந்த அடியவருக்கு வழங்கியதாகச் சொல்லப்படுகிறது. இது, கணவன் கட்டளையை மீறிய கடுங்குற்றமென்று கருதிக் காயவேண்டிய கடவுளன்பர்களால் குற்றமாகக் கருதப்படவில்லை. காரணம் என்ன? மாங்கனியைப் பெற்றுண்டவர் ஒரு சிவனடியார் என்பதேயாகும். அதனாலேயே, சேக்கிழாரும் அதனைக் குற்றமாகக் கருதாமல், புனிதவதியாரின் செயலுக்குப் புனிதத் தன்மை கற்பித்துள்ளார்.

இனிப், புனிவதியாரும், வந்தவர் ஒரு சிவனடியார் என்ற காரணத்தாலேயே அதனை அவருக்குக் கொடுத்துமிருக்கிறார். அதிலும், சோறுமட்டும் சமைத்துக், கறியெதுவும் சமைக்கப்படாத நேரத்தில், அதாவது, உணவுகொள்ளவேண்டிய வேளைக்கு முன்னதாகவே அந்த அடியவர் அங்கு வந்துள்ளார். உணவு வேளைக்கு முன்னதாகவே வந்த அடியவரை நோக்கி அந்த அம்மையார் என்ன சொல்லியிருக்க வேண்டும்? "அடியவரே! அடிசில்வேலை இன்னும் முற்றுப்பெறவில்லை, சோறுமட்டும் சமைக்கப்பட்டுவிட்டது; சற்று நேரத்தில் கறியும் சமைக்கப்பட்டுவிடும்; அதற்குள் உணவுகொள்ள வேண்டிய வேளையும் நெருங்கிவிடும்; தாங்கள் உண்டு பசி தீர்ந்துபோகலாம்" என்றுதானே சொல்லியிருக்க வேண்டும். அதுதானே முறையும் இயற்கையுங்கூட. வந்தவர்பசிதாங்க முடியாத பாலகனுமல்ல — பகற்பட்டினி இராப்பட்டினி கிடக்கும் கொடிய நிலையைப் பெற்றுள்ள ஒரு பாட்டாளியுமல்ல. பரமனின் நல்லடியார்; பசிநோய் தெரியாத அல்லது அவற்றைப் பொருட்படுத்தாத நிலையைப்பெற்றுள்ள பெருந்துறவி; ஒரு வேளை மீறிய பசி வந்துற்றாலும், அதனை அடக்கவல்ல ஐந்தெழுத்தை ஐயந்திரிபற ஓதி, அதனால் ஏற்படும் அன்பாம் இன்னருளமுதை நுகர்ந்து பேரின்பப் பெருங்கடலில் ஆழ்ந்து பசியறியாதிருக்கவல்லவர் என்று கடவுளன்பர்களால் போற்றப்படுபவர். இப்படிப்பட்டவரே காலை வேளையில் கடும்பசியோடு வந்தார் என்றும், அதுகண்ட அம்மையார்,

> "நாதன்தன் அடியாரைப் பசி தீர்ப்பேன்"

என்றார்,

> "விடையவன்தன் அடியாரே, பெறலரிய விருந்தானால் பேறி தன்மேல் இல்லை."

என்றும் எண்ணித் — துணிந்து, கறி சமைக்கும்வரை அடியவரைக் காக்கவைப்பது முறையல்லவென்று கருதிக், கணவன், தனக்காக வைத்திருக்கும்படி கொடுத்தனுப்பிய மாங்கனிகளில் ஒன்றைக் கறியாகவைத்துக் 'கனியோடு' அன்னமிட்டாள் என்றும் சொல்லப்படுகிறது. இது, அடியவர்பால் அந்த அம்மையார் கொண்டுள்ள அளவு கடந்த அன்பைக்காட்டுவதாக இருக்கிறதேயன்றிப், பசித்து வந்தவர்க்கு அன்னமிடுவதென்ற பொதுப்பண்பையோ அல்லது தமிழ்மக்களுக்கெனத் தனியாக அமைந்துள்ள சிறப்புப்பண்பையோ காட்டுவதாக இல்லை. பசித்துவந்தவர் எவராயினும், அவரை இன்னார் — இனியர் என்ற வேறுபாடு கொள்ளாது, இன்னமுதூட்டி மகிழ்விப்பதே தமிழ்மக்களின் சிறந்த பண்பாகும். ஆனால், இங்கு பேசப்படும் அம்மையாரின் விருந்துமுறை, சிவனடியாரன்றி மற்றையோருக்கு விருந்திடுதல் கூடாது, என்ற குறுகிய நோக்கத்தோடு கூடியதாகவே காணப்படுகின்றது.

இனி, நான் இவ்வாறு கூறுவது கண்டு, சில "சைவமெய்யன்பர்கள்" என்பால் சீற்றங்கொண்டு, "அந்த அம்மையார், சிவனடியாரிடத்தன்றி, மற்றையோர்பால் அன்பு கொள்ளாமையை எங்கு—எப்படிக் கண்டறிந்தாய்" என்று கேட்பர். அத்தகையினர்க்கு நான் கூறும் சமாதானம் ஏற்காதாயினும், சேக்கிழார் கூறும் சமாதானம் ஏற்கும் என்று கருதி, அல்ல! அல்ல! துணிந்து கூறுகின்றேன். அது இது:—

"தொண்டர்வரில் தொழுது" என்பது சேக்கிழார், புனிதவதியாருக்கு அளித்துள்ள சிறந்தபண்பு. "தொண்டர்'வரில்' தொழுது" என்ற இச்சொடர் விளக்கும் உண்மைப் பொருளை ஊன்றி நோக்குவோர், அந்த அம்மையாரின் உள்ளக்கிடக்கை எதுவாக இருந்தது என்பதைநன்குணர்வர். தொண்டர் அதாவது சிவனடியார் வந்தால் அவர்களைமட்டும் தொழுது அவர்க்கு வேண்டியன செய்வார் என்பதும், மற்றையோர் வந்தால் அவர்க்கேதும் செய்யார் என்பதுமே இச்சொற்றொடரால் அறிவுடைய எவரும் அறியக்கூடிய உண்மையாகும். எனவே, புனிதவதியாரிடம், மக்கள் அனைவரையும் ஒன்றாகஎண்ணி, அவர்க்குத் தம்மாலானதைச் செய்யும் தமிழர் பண்பு இருந்ததில்லை என்று கடைப்பிடிக்க.

இனிப், புனிதவதியாரின் கணவன், உணவருந்தும்போது இலையில் இடப்பட்ட மாங்கனியை உண்டு, அதன் தெவிட்டாத சுவை கண்டு,

> "இனையதொருபழம் இன்னும் உளது, அதனை இடுக"

என்று தன் துணைவியிடம் கூறுகின்றான். அதாவது தான் கொடுத்தனுப்பிய மாங்கனிகளில் இலையில் இட்டதுபோக "இன்னும் ஒன்று இது போன்றுள்ளது, அதனையும் கொண்டுவந்து இலையில் இடு" என்று கூறுகின்றான். அதுகேட்ட அம்மையார், அவ்விடம் விட்டகன்று, ஒரு தனி இடம் சென்று ஆண்டவனை வேண்ட, அவர் ஒரு கனியை அம்மையார் கையில் சேரும்படி செய்தார். அதனையுண்ட பரமதத்தன், "இது நான் அனுப்பிய மாங்கனி அல்லவே! இதனை நீ எங்கு பெற்றாய்?" என்று கேட்கின்றான். அதற்குப்புனிதவதியார், "திருவருள் உதவிய திறத்தை வெளியிடலாமோ?

(14-ம் பக்கம் பார்க்க)

2-ம் பக்கத் தொடர்ச்சி

படி, வாய்மிரட்டல், கைமிரட்டல், முதலியன குழந்தைகளின் இயல்பறிந்து நடப்பவைகள் அல்ல. குழந்தைகளுக்குப் பெரும்பாலும் விளையாட்டிலே விருப்பம் அதிகம். எதனையும் விளையாட்டாகக் கருதினால்தான், குழந்தைகள் சந்தோஷத்துடன் அதில் ஈடுபடும்.

விடுதலை பெறுவதே கல்வியின் அடிப்படை நோக்கம் எனும் முடிவிற்கு நாம் வந்து விடுவோமானால், இது ஈடேற இன்றைய போதனா முறையைத் திருத்தியமைப்பதில் தயக்கமிருக்காது. நாடுமுழுவதிலும் இன்றுள்ள பள்ளிக்கூடங்களுக்கேற்பக் குழந்தைகளை மாற்றுகிறோமன்றிச, குழந்தைகளின் இயல்பிற்கொத்தாற்போல் பள்ளிகளை அமைக்கவில்லை. மணிக்கணக்கில் பள்ளிகளில் அடைக்கப்பட்டுக் கிடக்கும் குழந்தைகள், புத்தகத்திலுள்ள சிலவற்றை மனப்பாடம் பண்ணுவதும், அடிக்கடி ஆசிரியர்கள் பிரம்பை அசைப்பதும், இரைவதும், ஆரம்பக் கல்வியாகக் காட்சி அளிக்கிறது. இது போன்ற பலஆண்டுப் பயிற்சியின் பலனாக, நமது சிறுவர்கள், கொஞ்சம் புத்தக அறிவையே பெற முடிகிறது. கல்விபெறாத பெற்றோர்களிடம் காணப்படும் பொது அறிவு கூட, இந்தச் சிறுவர்களிடம் இருப்பதில்லை. கல்விப்பயிற்சியில் சிறுவர்கள் பெற்ற வெற்றி, பணத்தினால் மதிப்பிடப்படுகிறது. கூலிபெறும் அடிமையாவது தான் இதன் பலன்.

பெரியவர்கள் குழந்தைகளைக் குறித்துக் கொண்டிருந்த எண்ணங்களெல்லாம் தவறானதாகும் என்பதை, வளர்ந்து வரும் உளநூல் எடுத்துக்காட்டுகிறது. எனவே, குழந்தைகளின் இயற்கை அறிவு வெளிப்படவும், சுயேச்சையாகச் செயலாற்றவும் நாம் ஊக்கவேண்டும். ஒழுங்கு, வழிகாட்டல், அறம் போதித்தல், மதக்கல்வி அளித்தல் முதலியன, குழந்தைகளின் இயல்பெனத் தவறாக நாம் தீர்மானித்துக் கொண்டிருப்பதால் செய்யப்படும் காரியங்களாகும்.

புத்திசாலிகள் என்று கருதப்படும் பெற்றோர்களும் ஆசிரியர்களும், இதனைக் கேட்டதும் சினந்தெழுவர். குழந்தைகளைச் சுயேச்சையாக விட்டு விட்டால், நெருக்கடி மலிந்த உலகில் அவர்கள் எப்படி வாழ்வதற்குத் தங்களைத் தகுதியுடையவர்களாக ஆக்கிக்கொள்வார்கள்? ஆதலால், அவர்களை இளமையிலேயே கட்டுப்பாடாகவும், ஒழுங்காகவும் வளர்க்க வேண்டும் எனவாதிப்பர். இதற்கு, நாம் கூறுவது ஒரே ஒருபதில்தான். அதாவது, நமக்காக இவர்கள் தயாரித்துள்ள உலகில், இருபத்தைந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஏற்படும் போரும், தினசரி நடைபெறும் கொலை, கொள்ளை, சித்திரவதை முதலியனவும், பொருளாதார அரசியல் நெருக்கடிகளும் நிரம்பியிருப்பதை எடுத்துக்காட்ட வேண்டும். புதிய கல்விமுறை, இத்தகைய உலகில் வாழ்வதற்குத் தகுதியுடையவர்களாக, நமது குழந்தைகளைப் பண்படுத்தாமல் விடுவதே நல்லதாகும். புதியதோர் உலகை அமைப்பதற்கு, இன்றைய உலகின் அவலட்சணத்தைத் தகர்த்தெறிய உதவவேண்டும்.

காரியஞ் செய்வதில் குழந்தைக்குள்ள ஆசையை மூலமாகக் கொண்டு 'செய்வதின்மூலம் கற்றல்' எனும் சித்தாந்தத்தை மேற்கொள்ள வேண்டும். ஓவியந் தீட்டல், ஒன்றைப் பார்த்து அது போல் உருவாக்கல், தொழில் செய்தல் முதலியனவற்றில் குழந்தைகளுக்குப் பயிற்சியளிக்கவேண்டும். ஒவ்வொருவரையும் சித்திரக்காரராக மாற்றவேண்டுமென்பதல்ல இதன் பொருள். 'மனப்பாடம் செய்தல்' எனும் முறைக்களித்த முக்யத்துவத்தை 'செய்வதின்மூலம்கற்றல்' எனும் முறைக்கு இடமளிக்க வேண்டும். ஆடல், பாடல், விளையாடல், வர்ணங்களைப் பூசுதல், கிறுக்குதல் போன்ற குழந்தைகளின் கற்பனா சக்திக்கு இடமளிக்க வேண்டும். ஒன்றை அறிதலும், உருவவேறுபாடுகளைத் தெரிதலும், தெரிந்தவண்ணம் கருத்தை ஓர் குறிப்பிட்ட பொருள் மூலம் உருவாக்கலும், குழந்தைகளிடம் அமைந்துள்ள இயற்கை உணர்ச்சிகளாகும். ஆதிகால மனிதன், இயற்கையை வெற்றிகாணும் வகையில் தனது குடியிருப்பையும், ஆயுதங்களையும் ஒழுங்கு படுத்திக்கொண்டதற்கு ஒப்பாகவே, ஒருபொருளைக்கண்டதும், அதுபற்றி நமது உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சியும் இருக்கிறது. இந்தக் கல்விமுறை குழந்தைகளின் செயலாற்றும் ஆர்வத்தை வெளியாக்குவதோடு, சிந்தனா சக்தியையும் பெருக்கி, விடுதலை எண்ணத்தையும் வளர்க்கும். விஞ்ஞானிகள் அறிவை உபயோகப்படுத்தின போதிலும், மைக்கிராஸ்கோப் போன்ற கருவிகளின் உதவியால்பல பொருள்களைப் பற்றிய நுணுக்கங்களை ஆராய்ந்து புதிய பல உண்மைகளைக்கண்டு கூறுகின்றனர். இதுபோலவே சித்திரம் தீட்டல், உருவமைத்தல் போன்ற காரியங்களில் குழந்தைகளை, அவைகளின் விருப்பப்படி பயமுறுத்தாமல் செய்யவிட்டு விட்டால், தாங்கள் பார்க்கும் பொருட்களின் தன்மையை நன்கு தெரிந்துகொள்ள வழியேற்படும்.

ஒரு பூவின் நிறம், மணம், அதன் இதழ்களின் அமைப்பு, அதனைக் கசக்கிவிடுவதால் ஏற்படும் விளைவு, முதலியவற்றை அனுபவ பூர்வமாகக் குழந்தைகள் கற்க முற்படுமானால், ஒரு பூவின் முழுத்தன்மையையும் அவைகள் அறிந்து கொள்ளும். ஒரு ரோஜா பலரை ஒருகுழந்தை கசக்கி விடுவதாக வைத்துக் கொள்வோம். இதனை வீணாகச் செய்ததாகக் கொள்ளக் கூடாது. ஏதாவது ஒரு வகையில் பூவைச் சிதைப்பதின் மூலம், அந்தப் பூ அடையும் மாற்றம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமெனும் குழந்தைக்குள்ள ஆச்சரியமே இதற்குக் காரணமாகும் என அமையும்படி விட்டுவிட வேண்டும். குழந்தைப் பருவத்தில் ஏற்படும் அனுபவ அறிவு என்றும் நினைவில் நிலைத்து இருக்கும்.

செய்தல், காணல், கேட்டல், நுகர்தல் முதலிய முறைகளால் இளமையில் அளிக்கும் பயிற்சியின் மூலம், அந்தந்த அவயவங்களின் இயல்பு வளம் பெறும், நினைப்பையும் அலைமோத விடாமல், எடுத்துக் கொள்ளும் காரியத்தில் முடிவு காணும் வரையில், அதன் மீதே நீடித்து நிலைத்திருக்கச் செய்யும் பழக்கம் ஏற்படும். மூளை விரிவடையும். பிற்கால வாழ்விலும் வெறுப்புத் தட்டாது. ஆரம்பத்தில் விடுதலை உணர்ச்சிக்குக் காட்டப்பட்ட சலுகையின் பயனாக வயோதிகப் பருவத்திலும் விடுதலை வாழ்வைக் காக்கும் ஆள் குறையாது இருக்கும், விடுதலைத் தீயும் ஒவ்வொரு உள்ளத்திலும் என்றும் அணையாது நிலைத்து நிற்கும் தன்மை உண்டாகும்.

பள்ளிக் கூடம் எனும் பெயரைக் கேட்டாலே குழந்தைகள் அழஆரம்

(12-ம் பக்கம் பார்க்க)

# ★ பெய்யெனப் பெய்யும் மழை! ★

—●—

மழை பொழிகிறது! மாதரசிகளின் கற்பின் திறத்தினாலல்ல — அது நமது நாட்டிலே, பாட்டிலே உள்ளது.

“அது சரி, நீ படித்துகிற பாட்டுக்கு, உன்னைக் கண்டதும், எனக்கு வருகிற கோபம் இருக்கிறதே, அது, என்னென்னமோ செய்யத் தூண்டுது போ. உன்னைக் கட்டிக்கொண்டு அழணும்னு என் தலையிலே எழுதி இருக்கு. நான் என்ன செய்வேன்? என்னமோ, ஊர்நாடு சிரிக்கிற மாதிரியா நடந்துகொள்ளக் கூடாதேன்னு, உன் கோணல் சேட்டைகளை எல்லாம் பொறுத்துக்கொண்டு கிடக்கிறேன். இந்த இலட்சணத்திலே, நீ, தத்துவம் சொல்ல வந்துவிட்டயோ, தத்துவம், உன் காலைத் தொட்டுக் கும்பிடணும்னு” என்று, கோபம் கொண்ட மனைவி கொக்கரிக்க, ‘அடி பைத்யமே! கற்புடைய மனைவி எப்படி நடந்துகொள்ளவேணும் என்பதுபற்றிக் காலட்சேபம் செய்யும் பாகவதர் சொன்னதைக் கேட்டு உனக்குக் கூறினேன், இது என் கட்டளையுமல்ல, விருப்பமுமல்ல, பெரியவர்கள் வாக்கு” என்று கணவன் விளக்க முரைக்க, “காசுக்குக் கதை சொல்லும் பேர்வழிக்கு கற்புடைய மங்கையின் கடமையை மட்டுந்தான் சொல்லத் தெரிந்ததோ. என்! கணவன் செய்யவேண்டிய கடமை மறந்து போச்சுதோ” என்று நியாயமான கேள்வியை அவள் கேட்க, “அசடே! அவர் சொன்னதுகூட, ஆண் பிள்ளைகளுடைய யோக்யதை, வளர வேண்டும் என்பதற்காக அல்லடி, கணவனின் பாதாரவிந்தங்களைத் தொழுகிற கற்புக்கரசிகள் பூலோகத்துக்குத் தேவை —ஏனென்றால், அப்படிப்பட்ட கற்பரசிகள் வாய் திறந்து சொன்னால், உடனே மழை பொழியுமாம்—பெய்யெனப் பெய்யும் மழை என்று பாட்டிருக்கு—மழை பூலோகத்துக்குத் தேவையல்லவா — அந்த மழையையே வாவென்று அழைக்கும் வல்லமை, பெண்களுக்கு வருகிறது, கற்பினாலே—அந்தக் கற்பை, மகிமையை, சக்தியை, பூலோகத்துக்கே நன்மை செய்யக்கூடிய சக்தியைப் பெண்கள் பெற வேண்டுமானால், அவர்கள், கடவுளைக் கூடக் கும்பிடத் தேவை இல்லை, கணவனுடைய திருவடியை வணங்கினால் போதும்” என்று கணவன் மேலும் உபதேசத்தை விளக்க, “அது உன்னைப் போன்ற உதவாக்கரைப் புருஷர்களைக் குறித்துச் சொல்லியிருக்க மாட்டார்கள் —உத்தமர்களைப் பற்றிக் கற்றவர்கள் சொன்ன பேச்சாக இருக்கும்” என்று அவள் மறுத்துரைக்க, “இதமாக இவ்வளவு சொல்லியும் எதிர்த்தாபேசுகிறாய்” என்று கணவன் சீறி, அவளை நையப் புடைக்க, அடிதாங்காத அம்மை, அழ, கண்ணீர் பொழியலாயிற்று. இங்ஙனம் வேண்டுமானால், பெய்யென மழை பெய்வதுண்டு நம் நாட்டிலே, ஏராளமான குடும்பங்களிலே. ஏட்டிலுள்ள பாட்டிலே மட்டும் இலட்சணமாகத் தீட்டிவிட்டனர், பெய்யெனப் பெய்யும் மழை! என்று.

இந்த ‘அற்புதத்தை’ இன்று, புண்ய பூமியினரல்லாத, புனித வேத மார்க்கத்தவரல்லாத, உருவ வணக்க மறியாத, மேனாட்டினர், சாதாரணமாக்கிவிட்டனர் —விரைவிலே, ‘மழை’ சந்தைச் சரக்குமாகிவிடும்!

மழை, வேண்டும்போது பொழியும்! வேண்டிய அளவு பொழியும்! வேண்டிய இடத்திலே பொழியும்! பதிகம் பாடி அல்ல—பத்தினியின் மொழிப்படியுமல்ல —விஞ்ஞான முறைப்படி.

விஞ்ஞானத்தை மறந்து, மெய்ஞ்ஞானமென்று எதை எதையோ கட்டிப் பிடித்துக்கொண்டிருந்த காரணத்தாலே, நம் நாட்டு மக்கள், மழை, இயற்கையின் இன்ப விளையாட்டுகளிலே ஒன்று என்பதையும் மறந்து, இந்திரனைக் கற்பித்துக் கொண்டனர். அவன் மேகங்களை விரட்ட, மேகங்கள் மிரண்டோடுமாம். ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும். இந்திரனும், அவ்வப்போது, தனது வச்சிராயுதத்தை வீசுவான்! இதன் காரணமாக எழும் பேரொலியே, இடி! வச்சிராயுதத்தின் பளபளப்பே, மின்னல், இப்படி எல்லாம், கற்பனை செய்து காலந்தள்ளி வந்தனர். காலா காலத்திலே மழை பொழியவில்லை என்றால், ஏதாவது தேவனுக்கு, ஏதோ தீங்கு செய்துவிட்டோம், எனவே, தேவதையின் கோபத்தைப் போக்க, ஏதாவது விழா நடத்தவேண்டும், என்ன செய்வது, மாரிக்குப் பொங்கலிடுவோமா, ஆடு கோழியை அறுத்துப் படையலிடுவோமா, மன்னரை அழைப்போமா, எருமைக் காவு கொடுப்போமா, கொடும்பாவி இழுப்போமா, கோபாலனைக் கும்பிடுவோமா, என்று இவ்வண்ணம், பல பேசிப், பல பூஜை செய்வது என்று முறை வைத்துக் கொண்டனரேயன்றி, மழை, மேகத்தின் விளைவு — மேகம், வெப்பத்தின் விளைவு—வெப்பம், காயும் கதிரவனின் செயல், என்ற சாமான்ய விஞ்ஞானத்தையும் பரப்பவில்லை. இந்திரனுக்குக் கண்கள் எத்தனை? வருணனுக்கும் வாயுவுக்கும் என்ன தொடர்பு? சூரியனுடைய இரதத்திலே எத்தனை குதிரைகள் உள்ளன? அதிலே வெள்ளைக் குதிரை உண்டா? என்ற இவ்விதமான கேள்விகளைத் தலைமுறை தலைமுறையாகக் கேட்டுக் கொண்டிருந்தனரேயன்றி, மழை இயற்கையின் கூறு —ஆனால் அதனை மனிதன் கட்டுக்குள் கொண்டுவர முடியுமா? மனிதனின் அறிவு, இந்த இயற்கைச் சக்தியைத், தன் இஷ்டம்போல் அடக்கியாள உதவுமா? என்ற கேள்வியைக் கேட்டதில்லை. எப்படித் துணிவு வரும்? நாம்தான், இயற்கையின் ஒவ்வொரு கோலத்துக்கும், ஒவ்வோர் தேவனைச் சிருஷ்டித்து விட்டோமே! அந்தத் தேவ லீலைகளைப் பற்றிச் சிந்திக்கவும் பேசவும், கதையும் கவிதையும் எழுதவும், மனம் இடந் தந்ததேயொழிய, விஞ்ஞானத்துக்கு இடம் கிடைக்கவில்லை.

மேனாட்டினரும், துவக்கத்திலே, தேவர்களைத்தான் தொழுதனர். மழை வேண்டுமானாலும் சரி, பெருமழையால் வெள்ளம் புரண்டு ஊர் அழிவதைத் தடுக்கவேண்டுமானாலும் சரி, அவர்களும், அவர்கள் நாட்டுக்கு இந்திரன் போன்ற தேவதைகளைச் சிருஷ்டித்துக்கொண்டு, கோயில் கட்டிக் கூத்தாடித்தான் வந்தனர். அங்கும் கம்பர் பலர், கனிரசக் கவிதைகளை இயற்றித்தான் தந்தனர். ஆனால், அவர்கள், அந்தக் குழவிப் பருவத்தைக் கடந்து, பகுத்தறிவாளராகி, இன்று, இயற்கையின் சகல பண்புகளையும் தெளிவாக உணரவும், அதனை அடக்கவும், தெரிந்துகொண்டனர். எனவே அங்கு இன்று பெய்யெனப் பெய்யும் மழை! என்பது, பாட்டளவோடு இன்றி பரீட்சித்துப் பார்க்குமளவு பக்குவமும் பெற்றுவிட்டது. மதவாதிகள் — அவர்களில் நேர்மையானவர்களை மட்டும் குறிப்பிடுகிறோம்—வெட்கபபடும்படி, விஞ்ஞானத்தைத் துணைக்கு அழைத்து, மழையைப் பொழியச் செய்து காட்டினர்— மகான்களல்ல சாமான்யர்கள் — அருள் பெற்றவர்களல்ல, அறிஞர்கள்.

பாலகனைக் கருவில் கொண்டுலவும் தாய்போல, மேகம் வான வீதியிலே சஞ்சரிக்கிறதல்லவா? ஆஸ்திரேலிய நாட்டு விஞ்ஞானிகள், அந்த மேகத்தை, தன் இஷ்டப்படி மழை பெய்வதற்குப் பதில், மக்கள் வேண்டும்போது பொழிய வைக்க வழி கண்டுபிடித்தனர். முட்டையைக் கோழி அடைகாத்துக் குஞ்சு பொரிக்கிறது—எங்கும்—பல நூற்றாண்டுகளாக—புராண மொழிப்படி கூற வேண்டுமானால் யுக யுகமாக! ஆனால், இப்போது, முட்டையிலிருந்து ‘குஞ்சு,’ அடைகாத்திடாமல், விஞ்ஞான முறையினாலே, வெளியே கொண்டுவரப்படுகிறது. அதுபோல. மேகம், தானாகக் கனிந்து மழையைப் பொழிவதற்குப் பதிலாக, மேகத்தைக் **கனியச் செய்து மழை**

யைப் பொழியச் செய்கிறார்கள்—ரமண ரிஷியா? அல்ல! அரவிந்தரா? அல்ல! ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள். மேக மண்டலத்துக்கு விமான மூலம் சென்று, கட்டி கட்டியாகக், கெட்டியான பனித் துண்டுகளை வீச, அந்த பனித் துண்டுகளின் தாக்குதலால், மழையைச் சுமந்துகொண்டு செல்லும் மேகக்கூட்டம், தளர்ந்து, மழையைப் பொழிகின்றன.

ஒருநூற்றாண்டுக்கு முன்பு நினைத்திருக்க முடியாது—கற்பனைக்கு எட்டாதது. இன்று, சாதாரணக் காட்சியாகி விட்டது அது மட்டுமா, யாருக்கும் எளிய காரியமுமாகிறது. விஞ்ஞான முறைப்படி மழையைப் பொழிய வைக்கும் இந்த முறையை அமெரிக்கா, பெரிய அளவில், கையாண்டுவரத் தொடங்கிவிட்டது.

நம்நாட்டிலே உள்ள விவசாயிக்கு, சொந்தத்தில் ஒரு ஜோடி உழவுமாடும் கிடையாது! அமெரிக்காவிலே, கொஞ்சம் நடுத்தரக் குடியினருக்கு—சொந்த விமானமே உண்டாம்! அங்கு, விவசாயிகள், விமான மேறிச் சென்று, முன்பு கூறப்பட்டுள்ள முறைப்படி, மேகத்தைத் தாக்கி மழையை, தங்கள் 'பண்ணை'யில் பெய்ய வைத்திருக்கிறார்கள்! அந்த அளவுக்குச் சென்றிருக்கிறது, அவர்களின் அறிவு!! பெய்யெனமழை பெய்கிறது அங்கே, அதைப் படிக்கிறோம். அவர்கள் போல, மேகமண்டலம், சந்திரமண்டலம், அளவுக்குக் கூட நமது விஞ்ஞான அறிவு உயர வேண்டியதில்லை. ஏதோ ஒரு குறிப்பிட்ட அளவுக்காவது முன்னேறவேண்டாமா? அதற்கான முயற்சியாவது வேண்டாமா? நாட்டு மக்களின் நிலைமையையும் மக்களை நடத்திச் செல்பவர்களின் நடவடிக்கைகளையும் கவனிக்கும்போது, துக்கமும் வெட்கமும் சேர்ந்து தாக்காதிருக்கமுடியாது. சனாதனச்சேற்றிலிருந்தே இன்னமும் கருத்து எழவில்லை, பலருக்கு இன்றும் அந்தச்சேறு, சந்தனமாக இருக்கிறது.

சஞ்சரிக்கும் மேகத்தை அங்கு மனிதன், அறிவு கொண்டு ஆள்கிறான். ஆள்வது மட்டுமல்ல, இந்த நிலைமையினால் ஏற்படக் கூடிய நலன்கள் யாவை? சிக்கல்கள்யாவை, என்பதையும் கணக்கெடுத்துக் காரியமாற்றுகிறான். மேகத்தை அடக்கிவிட முடியும்! ஆனால் அதுமுறையா? இதோ சஞ்சரிக்கும்மேகம் நாளையதினம் வேறோர் பண்ணைக்கு நீரளிக்கக் கூடும். அதனைத்தடுத்து, இன்றே, இந்தப்பண்ணைக்கு நீரைப்பெற்றுக்கொள்கிறான், விஞ்ஞானத்தால். இது, மேகத்தைத் திருடுவதாகாதா? இந்தக் களவைத் தடுக்கவேண்டாமா? இதற்காக உலக நாடுகள் ஓர் தனிக்கழகம் காண வேண்டிய அவசியம் ஏற்படலாம், என்று யோசனை பேசப்படும் அளவுக்கு, மேனாட்டினர், முன்னேறிவிட்டனர் அணுகுண்டு அழிவின்சக்தி என்ற ஆரம்ப விஷயத்தை மட்டுமே நாம் காதால் கேட்டுக் கொண்டிருக்கும் 'பருவத்தில்' இருக்கிறோம். ஆனால் இதேபோது, நமது, கற்பனைக்கும் எட்டாத அளவுக்கு அணுசக்தியினால் உண்டாக்கக்கூடிய, ஆக்கவேலைகளைக் கவனிக்கத் தொடங்கி விட்டனர். அங்கு ஆளில்லாத விமானம் பறக்கிறது! அதிசயம், அன்றாடப் பொருளாக்கப்பட்டு விட்டது, இந்த உலகச்சூழ்நிலையிலே, இதே நேரத்திலே, விடுதலைபெற்ற இந்தியாவின் சர்க்காரை நடத்தும் விவேகிகள், ஒரு அரிய ஆராய்ச்சிக்கு ஆதரவளித்திருப்பதாகப், பத்திரிகைச்செய்திவந்திருக்கிறது. என்ன ஆராய்ச்சி? திடுக்கிட்டுப் போவீர்கள்! உலகமோ, கைகொட்டிச் சிரிக்கும், நம்எதிரே அல்ல, மறைவில்!

மகாபாரதத்திலே, சாந்திபர்வம் சரியான முறையிலே பதிப்பிக்கப்படவில்லையாம்—அதற்கான மூலாதார ஏடுகள் கண்டுபிடிக்கப் படவில்லையாம்! இந்த மகத்தான 'பர்வம்' இல்லாத குறையைக் களைய, மகாபண்டிதர்கள், வரலாற்றுநிபுணர்கள், ஆராய்ந்து, அலுத்து, கடைசியில் ஆதார ஏடுகள், நேப்பாள மன்னரிடம் இருப்பதாக அறிந்து, அவருக்குச் 'சேதி' அனுப்பி, அவருடைய சம்மதமும் பெற்று அங்கு செல்கிறார்கள், ஏடுகளைப் புரட்ட. இதற்காகப் பணம் செலவிடச் சர்க்காரும் இசைகிறது, சீமான்களும் இசைந்துள்ளனர், விரைவிலே, இந்தச் சாந்திபர்வ ஆராய்ச்சி வெற்றிகரமாக நடைபெற்று, புத்தகம் பதிப்பிக்கப்படும், இதுபத்திரிகைச் செய்தி! மழையை வரவழைக்கிறான், விஞ்ஞானத்தின் துணைகொண்டு அங்கே! இங்கு மகாபாரதத்தின் மாண்பினைவிளக்க, சாந்திபர்வ ஆராய்ச்சி நடத்தப்படுகிறது! நல்ல வேளை, நம்நாட்டு ஆராய்ச்சியை இந்த அளவுடன் நிறுத்தி விட்டனர். துச்சாதனன் உரிந்த துகில் எவ்வளவு கெஜம் இருக்கக்கூடும், என்ற அரிய ஆராய்ச்சிக்காக, ஆறுஇலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது, அதற்கு டாக்டர் அழகப்பா அரைஇலட்ச ரூபா நன்கொடை அளித்திருக்கிறார், என்ற அளவுக்கு இன்னும் போகவில்லை. சாந்திபர்வத்தோடு இருக்கிறார்கள்.

சாந்திபர்வம்! 1947-ல்! அங்கு ஆளில்லா விமானம் பறக்கிறது என்ற செய்தியும், சாந்திபர்வ ஆராய்ச்சி இங்கு நடக்கிறது, என்ற செய்தியும், ஒரேபத்திரிகையிலே வெளிவருகிறது. ஒருதுளியாவது, வருத்தமோ வெட்கமோ அடையாமல், இரண்டையும் படித்துவிட்டு, இப்படியும் இந்தநாடு இருக்கலாமா உலகின் கண்முன் இந்நிலை மதிப்பைப் பெற்றுத் தருமா, என்று கொஞ்சமும்சிந்திக்காமல், இன்று, ராக்சியில் என்ன? காசினோவில் என்ன? என்று சினிமாச் செல்தியைப் பார்த்துக்கொண்டுள்ளனர் மாணவர்கள். மாநிலமெங்கும் விஞ்ஞானத்தை மக்களின் தோழனாக்கிச் கொண்டுள்ளனர், நாமோ, பழையபஞ்சாங்கத்தையே நம்பிக் கொண்டிருக்கிறோம். துணிந்து, இதுதவறல்லவா, என்று, திராவிடர்கழகத்தார் சொல்லவந்தாலோ, பிடி சாபம் என்கிறார் கல்விமந்திரியார்! கடுங்கோபம்கொள்கிறார்,—ஏறத்தாழ, மூலவியாதிக் காரருக்கு மூண்டுவிடும்கோபம் என்பார்களே, அந்த அளவுக்குப் போய்விடுகிறது அவனாசியாரின் கோபம். மந்திரிகளின் போக்கோ இது—மாணவர்களின் நிலையோ மாலைநேரமீதே மாங்குயில் கூவும் நேரம் என்ற முறையில்—மக்களோ, மகேசா! சிற்சபேசா! நடேசா! என்ற பழக்கமான பஜனைப் பேச்சளவில் உள்ளனர். இந்தநிலை இங்கு! அங்குபெய்யெனப்பெய்யும் மழை, என்பது, பாட்டளவில் இன்றி, நாட்டிலே, செய்துகாட்டப்படுகிறது!! நீண்டதோர் பெருமூச்சன்றி, வேறென்ன கொள்ளமுடியும், இந்த நிலையை எண்ணினால்........

✲

மதிப்புரை.

## "தீப்பொறி"

——

(வார இதழ்)

தனிப்பிரதி அணா 1.

ஆண்டு சந்தா ரூ. 4.

வேலூர் தளபதி C. P. சிற்றரசு அவர்கள் இதன் ஆசிரியர் ஆவர். அவருடைய கனல் கக்கும் சொல் போலவே, எழுத்தும் அமைந்திருக்கிறது. திராவிடர் கழகத்தின் படைக்கு, வன்மைமிக்க புதியதோர் ஆயுதம் கிடைத்திருக்கிறது. 'தீப்பொறி'யின் தணல்அணையாமல்பார்த்துக்கொள்ளவேண்டியது தமிழர்களின் நீங்காக்கடமை என்பதே எமது விருப்பம்.

கிடைக்குமிடம் :—

நிர்வாகி

'தீப்பொறி"

காரியாலயம், வேலூர்.


"தமிழ் நிலம்"

தோழர் அண்ணல் தங்கோ

ஆசிரியர்.

24—10—47 முதல் கிழமை

இதழாக வெளிவருகிறது.

விபரத்திற்கு :—

"தமிழ் நிலம்"

77, நயினியப்பன் தெரு, மண்ணடி

சென்னை.

# திராவிட நாடு

காஞ்சி] 12—10—47 [ஞாயிறு


## குருவும் குதிரையும்

✲

குருவிடம் பக்தி காட்ட வேண்டியதும், அவருடைய சொற்படி நடக்கவேண்டியதும் முக்கியமா? குதிரையிடம் அன்பு காட்டுவது முக்கியமா?

இந்தச் சிக்கலான பிரச்னை, உணவு, உடை, ஊராளும் முறை, முதலிய பல்வேறு பிரச்னைகளையும் மீறி, அமைச்சர் சுப்பராயனுருக்கு, வந்துவிட்டது.

குருவிடமோ, பக்தி மட்டுமல்ல—நன்றியறிதல் காட்டவேண்டிய அளவுக்குத், தொடர்பு இருக்கிறது. அவருடைய பெயர் கூறியே, பதவிக்கு வரமுடிந்தது. குரு பக்தியைச் செயலில் காட்டவேண்டிய போது, காட்டத் தவறி விட்டவர்களிலே இவரே முதன்மையானவர், என்ற பழிச்சொல், எங்கே தமது அரசியல் வாழ்வைப் பாழாக்கி விடுமோ என்று அமைச்சர் அஞ்சியதுண்டு. அந்த அச்சத்திலிருந்தும் தப்புவதற்காகத், தமது குரு பக்தியை, மற்றவர்களை விடச் சற்று அதிகமாகவே, உரத்த குரலிலேயே, டாக்டர் சுப்பராயன் காட்டிவந்தார். இப்போது நடைபெற்ற காந்தி ஜெயந்தியிலே, காந்தியாருடனேயே இருந்துவந்த வினோபாபாவே, மீரா பென் போன்றார்களைவிட அதிகப் பற்றும் பாசமும், பக்தியும் சிரத்தையும் கொண்டவர்போலக் காட்டிக்கொண்டார். காந்தி மார்க்கமே சாந்தி மார்க்கம், என்று பாசுரம் படித்தார். எமது காந்தியார் வழி காட்டுவதற்கு இருக்கும்போது, ஸ்டாலின் ஏன், பொதுஉடைமை ஏன், என்று, கேட்டார்—கம்யூனிஸ்டுகளின் எதிரேயே!! இவ்வளவு பளிச்சென்று காட்டிக்கொண்டார், தமது குருபக்தியை. உண்மையிலேயே, குரு பக்தியினால், டாக்டர் சுப்பராயன் பலன் பெற்றவர்! அமைச்சர் பதவி, குரு தந்தபிச்சை. எனவே, குரு பக்தியை மறக்க முடியாது.

அதேபோது, அமைச்சருக்கு; குதிரையிடம் உள்ள பற்றும் பாசமும் குறைய மறுக்கிறது. குருவினால் பலன்பெற்றதுபோலக், குதிரையினால், பலன் பெற்றவரா, டாக்டர் சுப்பராயன் என்றால், அதுவும் இல்லை. ஆகாகான்போல, பர்லாகெமிடிபோல, ஜெயப்பூர் ஜோத்பூர் போல, குதிரையால் இலாபம், புகழ், பெறுபவருமல்ல. என்றாலும், குருபக்தி அவருக்குப் பலனை, இலாபத்தைத் தந்திருக்கிறது — அதேபோது, அந்த அளவுக்கு, குதிரை அவருக்குப்பலனும், இலாபமும் தந்ததாகத் தெரியவில்லை. அவரே, சட்டசபையிலேயே கூறினார், நான் பத்தாண்டுகளுக்கு மேலாகக், குதிரைப் பந்தய விளையாட்டுச் சங்கத்திலே தொடர்பு வைத்துக்கொண்டு இருந்தும், அதிலே, பணம் வைத்துப் பந்தயம் ஆடினதில்லை, என்று.

ஆகவே, அமைச்சருக்குக் குருவிடம் பக்தி காட்ட வேண்டிய அளவுக்கு, குதிரையிடம் காட்டவேண்டிய அவசியம் இல்லை என்ற போதிலும், குதிரையைக் கைவிட மறுக்கிறார். அதற்காக, மக்களை, அவர்கள் நலனைக்கூடக் கைவிட மறுக்கிறார்.

குதிரைப் பந்தயம், விளையாட்டுகளிலே ஒன்று என்கிறார். ஆமாம்! அமைச்சர் கூறுவது உண்மை. ஆனால், எத்தனை எத்தனை ஆயிரம் குடும்பங்களிலே, இதனாலே வேதனை மூண்டிருக்கிறது — எத்தனை குடும்பங்கள் கலகலத்துள்ளன, என்பதை எல்லாம், குமாரமங்கலம் ஜெமீன்தாரர் அறியமாட்டாரல்லவா! விளையாட்டாம் இது! கிரேக்க, ரோம் நாடுகளிலே, இதைவிட அருமையான விளையாட்டுகள் நடைபெற்றன. பசியோடுள்ள சிங்கத்தினெதிரில், ஒரு மனிதனை நிறுத்திவிட்டுச், சிங்கம் சீறிப் பாயமுடியாத உயரத்தில் சீமான்கள் அமர்ந்துகொண்டு, மனிதன் சிங்கத்திடம் போரிடும் காட்சியைச், சிங்கத்தின் பற்களால் அவன் சின்னாபின்னப்படுவதைச், சிங்கம் இரத்தத்தைக் குடித்துக் கர்ஜிப்பதைக் கண்டு, சபாஷ்! அருமை! ஆஹா! என்று ஆனந்தமாகக் கூவுவராம். இத்தகைய விளையாட்டிலே, வீரம்சம் சொட்டுவதாகக் கூறினர்—சொட்டியது அல்ல, கொட்டிற்று, மனிதனின் இரத்தம்! அத்தகைய விளையாட்டுகளையும், அந்நாள் ஆணவக்காரர்கள், அனுமதித்தனர் — அரசுகள் ஆதரவளித்தன. டாக்டர் சுப்பராயனும்; இப்போது, விளையாட்டு வேண்டுமென்கிறார் — மக்களின் வேதனையைக் கவனிக்க மறுத்து எந்தவிளையாட்டு, யோக்யனை அயோக்யனாக்கிற்றோ, கபடமற்றவனைக் கள்ளனாக்கிற்றோ, படுத்துறங்கும் போது மனைவியின் நகையைத் திருடச் செய்ததோ, பாலகனுக்கு மருந்து வாங்கித் தருவதற்குப்பணம் இல்லை என்று கூறிவிட்டுப், பணத்தைப் பாழாக்கவைத்ததோ, அத்தகைய விளையாட்டு வேண்டும் என்கிறார், பசி, பட்டினி, பாடு, பாட்டாளியின் துயரம், நடுத்தரமக்களின் நலிவு, ஏதுமறியாத குமாரமங்கலம் ஜெமீன்தாரார், அமைச்சர் டாக்டர் சுப்பராயன். குதிரைகளிடம் காட்டும் இந்தப்பரிவிலே, ஆயிரத்திலோர் பாகம் பகிர்ந்து மக்களுக்கு மந்திரியார் அளிக்கக்கூடாதா! மக்களைத்தான் மறந்தார் — அந்த மறதி, மந்திரிப்பதவியூட்டும்நோயின் ஓர்பகுதி—எனவே அதைக்கூடப் பிறகு கவனிப்போம் — மந்திரியார், எந்தக் குருவினால், இந்த அமைச்சர் பதவியைப் பெற்றாரோ, அந்தக் குருவிடம், பக்திகாட்ட வேண்டாமா? அவருக்குமா துரோகம் புரிவது? குருவைவிடவா, குதிரை! குருபக்தியையுமா, குதிரை, கைவிடச் செய்கிறது? எவ்வளவு வேதனை தரும் விந்தை இது.

அமைச்சர், அசுவ ரட்சகனாக இருந்தேதீருவேன் என்கிறார். குரு, கூறுவது என்ன? அமைச்சரின், குருதேவர், காந்தியார், கூறுகிறார்—கூறினால் மறந்து விடுவாரோ, என்று-எழுதியே இருக்கிறார்.,

“நான் குதிரைப் பந்தயத்தின் தீமைகளைப்பற்றி அடிக்கடி எழுதியிருக்கிறேன். ஆனால் என்னுடைய குரல், காட்டில் கத்திய குரலாகவே இருந்தது. நம்மை ஆண்டுவந்த அன்னிய அரசர்கள் அந்தத் தீய வழக்கத்தை விரும்பினார்கள். ஆனால் இப்பொழுது நாம் அந்தத் தீய வழக்கத்தை வைத்துக்கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை. அப்படிச் செய்யாமல், அன்னிய ஆட்சியின் நன்மைகளைப் போக விட்டுவிட்டுத், தீமைகளை வைத்துக் கொண்டிருக்கலாமா?”

என்று, தமிழ் அரிஜன் பத்திரிகையில் காந்தியார், இந்த ஆகஸ்ட்டு 24-ந்தேதி எழுதியிருக்கிறார்.

“அடிக்கடி எழுதியிருக்கிறேன்.”

இது, குருதேவரின் வாக்கியம்! அமைச்சர்களாகுமளவு மட்டுமே குருபக்தியைப்பலர் பயன் படுத்திக் கொள்வர், உபதேசத்தை, தத்துவங்களை மறந்துவிடுவர், என்று எண்ணிப்போலும், காந்தியார், அடிக்கடி எழுதிவந்தார். இடித்து இடித்து உரைத்தார் என்று பொருள் படுகிறது. அடிக்கடி குதிரைப் பந்தயத்தால் வரும் தீமைகளைக் காந்தியார் எழுதியிருந்தும், ஏன், அமைச்சர், குதிரைப்பந்தயத்தை ஒழிக்க முடியாது என்று பட்டவர்த்தனமாகக் கூறுகிறார். குதிரைகள் விஷயமாகக் குருவுக்கு என்ன தெரியும் என்று எண்ணுகிறாரா? குரு, ஆயிரம் கூறுவார், அதற்கெல்லாம் கட்டுப்பட்டு இருக்கமுடியுமா? என்ற அலட்சிய சுபாவமா? என்ன காரணம், குரு காட்டிய திட்டத்தைமீறி, அதற்கு நேர்மாறாக நடக்க?

காந்தியார், அந்த இதழில், "ஆனால் என்னுடைய குரல்காட்டில் கத்திய குரலாகவே இருந்தது" என்று, சோகம் கப்பியமுறையிலே எழுதியிருக்கிறார். குருவின் பேச்சுக்,கவனிப்பாரற்றுக்கிடந்ததற்குக்காரணம் என்ன? அதனையும் அவரே குறிப்பிடுகிறார்.

"நம்மை ஆண்டுவந்த அன்னிய அரசர்கள் அந்தத்தீய வழக்கத்தை விரும்பினார்" என்று.

தீயவழக்கம்!— இது அமைச்சர் பதவியைப் பெற்றுத்தந்த குருவின் பேச்சு.

அன்னியர்கள் இந்தத் தீயவழக்கத்தைப்புகுத்தினர் —நாமோ அன்னியரால் ஆளப்பட்டு வருகிறோம். ஆகவேதான், இதுபோன்றதீயவழக்கங்கள் மலிந்துள்ளன — நான்காட்டும் நன்னெறியிலே புகுவதற்குஅவர்களுக்கு இஷ்டமில்லை; — அறநெறி அறிந்துரைக்கிறேன், கேட்பாரில்லை, —ஆகட்டும், ஆகட்டும்—இந்த அன்னியராட்சி ஒழியத்தான் போகிறது, இன்றில்லாவிட்டால் ஓர்நாள் நாம் இருக்கும் நாடு நமதுஎன்றாகி, நாமே நாடாளத்தான் போகிறோம் — அப்போது, இந்தத்தீயவழக்கங்களைத் தொலைத்துவிடுவர், நமது சீடர்கள்— என்றெல்லாம், காந்தியார் எண்ணமிருந்திருக்க முடியுமா? காங்கிரஸ் ஆட்சிப்பீடத்தில் ஏறியதும் காந்தியார்,வெள்ளையர் என் விவேகமொழியைக் கேட்க மறுத்தனர், அவர்களுக்குக்,குதிரைகளிடம்இருந்த அளவு மதிப்புஎன்னிடம்இல்லை,ஒழிகிறார்கள் இந்த நாட்டைவிட்டு, இதோ என் சீடர்கள் அமருகிறார்கள் ஆட்சிப் பீடத்தில், ஒருவரியில், குதிரைப் பந்தயத்தை ஒழித்துவிடுகிறார்கள், பாரீர், என்று கூறியிருந்திருப்பார்.

ஆனால், இப்போது, டாக்டர் சுப்பராயன், குருவாக்கியத்தை விட, குதிரையையே மேலெனக்கொண்டுவிட்டதைக் கேள்விப்பட்டால் குருவின் மனம் எவ்வளவு புண்படும்— எவ்வளவு திடுக்கிட்டுப்போவார்!

குருவா, குதிரையா, என்ற பிரச்னை வந்தது—நாட்டைக் காடாக்கியவர்கள்தான் என்மொழி கேட்க மறுத்தனர் என்றால், என் சீடர் டாக்டர்சுப்பராயனே, குதிரையைத்தான் ஆதரிப்பேன்,குருவையும் கவனியேன், என்று கூறிவிட்டாரே, என் செய்வேன், இந்தத் துக்கத்தை எதைக்கொண்டுஆற்றிக்கொள்வேன், என்று வாடியிருந்திருப்பார். குருவா, குதிரையா?—குதிரைதான் —குரு அல்ல! அமைச்சர்அறிவித்துவிட்டார்! மக்கள் என்ன கூறப்போகிறார்கள்? மனம் உடைந்தவர்கள், குடும்பத்திலே தொல்லை பல கண்டவர்கள், ஏராளம், இந்தப் பாழும் குதிரைப் பந்தயத்தினால். ஏழைகளைக் கெடுக்கும், தொழிலாளரைப் பாழ்படுத்தும், இந்தக் கொடிய பழக்கத்தை, இனியும் விட்டுவைப்பது, ஆணவக்காரருக்கு அடுக்குமேயொழிய, மக்களின் நல்வாழ்க்கையைக் குறியாகக் கொண்டவர்களுக்கு அழகல்ல. ஒழுக்கத்திலே, ஓமந்தூராருக்கு, அதிகப்பற்று உண்டென்று கூறுகிறார்கள். அவரோ, ஏழையைக் கெடுக்கும் இந்தக் கொடிய தீமை, இருக்கவேண்டும் என்று எண்ணுகிறார். ஏன், ஓமந்தூரார், தமது கருத்தைக் கூறக் கூடாது? சட்டசபையினரே! ஏழைகளைக் காப்பாற்றவே, நாங்கள் செல்கிறோம் என்று எக்காளமிட்ட நண்பர்களே! இந்தக் கொடுமை, அன்னியர்கள் புகுத்திய தீமை, காந்தியாரால் பன்முறை கண்டிக்கப்பட்ட கொடுமை, இனியும் இருக்கத்தான் வேண்டும் என்று, குருவையும் மறந்து குதிரைக்காகப் பரிந்து, பேசுகிறார், அமைச்சர்! உங்கள் கருத்து என்ன? ஊராளச்சென்றது, ஊமைகளாகச் சட்டசபையிலே வீற்றிருக்க அல்ல! பேசுங்கள்! தெளிவாகப் பேசுங்கள்! தைரியமாகப் பேசுங்கள்! மக்களுக்காகப் பேசுங்கள்! டாக்டர் சுப்பராயனைக் கேளுங்கள், குருவா, குதிரையா, எதற்கப்பா, மதிப்பளிக்கிறீர் என்று கேளுங்கள்.

கட்சிக் கட்டுப்பாடு, கருத்தை மறைக்குமே நாங்கள் என்ன செய்வோம், என்று கசிந்துருகும் சட்டசபை அங்கத்தினர், இதோ, நமது மனக் கண் முன் நிற்கிறார்; அவரும் பேசுவதற்கில்லை! அமைச்சரோ, மக்கள் பக்கம் நிற்க மறுக்கிறார்! குதிரைகளோ, இனியும் பல குடும்பங்களைத் தமது காலால் போட்டுத் துவைத்துவிடத் தயாராக உள்ளன. இந்நிலையில்,பொதுமக்களின் நலனைப் பாதுகாக்கும் பண்பும் பொறுப்பும், பயிற்சியும் கொண்டவர்களின் கடமை என்ன? அவர்கள் கூடித், திட்டம்வகுத்து இந்தத்,தீமையைஎதிர்த்து ஒழித்தாக வேண்டும்—ஒழிப்பதற்கான கிளர்ச்சி, அப்படி ஒன்றும் பிரமாதமான கஷ்டமும் தரக் கூடியதல்ல. நேரடி நடவடிக்கை எடுத்தாகிலும், இந்தக் குதிரைப் பந்தயக் கொடுமையை ஒழிக்க, ஒரு படை திரள்கிறது, என்பதறிந்தாலே போதும், அமைச்சர் தமது போக்கை மாற்றிக் கொள்வார். பொதுவாகவே, இன்று நாடாளப் போயிருப்பவர்கள் மனதிலே ஒரு தவறான கருத்து இருக்கிறது அதாவது, கிளர்ச்சி செய்ய, போராட, கஷ்டநஷ்டம் ஏற்க, சிறை செல்ல, சட்டம் மீறத், தங்களுக்கு மட்டுமே தெரியும், மற்றவர்கள் இந்த முறையினை அறியார், அறிந்திருப்பினும், அஞ்சுவர் பணியாற்ற, அஞ்சாது கிளம்பினும், அதிகாரத்தைக் கொண்டு, கிளர்ச்சியை அடக்கி விட முடியும் என்று எண்ணுகின்றனர், பலப் பல மேதைகளை, மேட்டுக் குடியினரை, முடிமன்னர்களை, இவ்விதமான எண்ணம் பிடித்து ஆட்டிக் கெடுத்திருக்கிறது. இவர்கள்மட்டும், பாபம், எப்படித் தப்பிவிட முடியும்! ஆனால் அந்தத் தவறான கருத்தைச்,சொல்லால் மட்டும் அல்ல, செயல்மூலம், கருவறுத்தாலொழிய, இந்த நாடு, பாசிசத்திலிருந்து விடுபடமுடியாது உண்மை மக்களாட்சி மலர வேண்டுமானால், பொதுமக்கள், இத்தகைய காரியங்களிலே,சுய சிந்தனையை முக்கியமானதாகக் கொண்டு, காரியமாற்ற வேண்டும். கட்டுப்பாடும் கட்சியிலே உள்ள நிலையும் கெடும், என்பது பற்றிய கவலையற்றுப், பல காங்கிரஸ்காரர்கள், டாக்டர் சுப்பராயனின் போக்கை எதிர்க்க முடிவு செய்துள்ளனர் என்று அறிந்து

மகிழ்கிறோம்—குதிரைப் பந்தயக் கொடுமையை ஒழிப்பதற்கான முயற்சியில், நமது பங்கும் உண்டு என்று கூறி, அந்த முயற்சியை வரவேற்கிறோம். நாடாள்பவர்கள்உணர வேண்டும், மக்களின் சார்பிலே நாடாளச் சென்றிருக்கிறோம் என்பதை. குதிரைப்பண்ணை வைப்பதற்கல்ல. ஏழை வாழ, ஆட்சி வேண்டும். அமைச்சர்கள் இந்த அரும்பாடம் பெற்றாக வேண்டும். மக்களின் கட்டுப்பாடான கிளர்ச்சியைப்போல, அமைச்சர்களை நல் வழிப்படுத்தக்கூடிய ஆசான் வேறு இல்லை.

★

## பழைய பாதை!

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே, காங்கிரஸ் பற்றுடைய மாணவர்கள், திராவிடர் கழக மாணவர்களைத்தாக்குமளவு, 'பண்பு' பெற்றுள்ளனர் என்று அறிகிறோம். தமிழ்ப்பேரவையினர், பல்கலைக்கழகத்துணைவேந்தரின் ஒப்புதலைப் பெற்றுப்,பெரியார்விழாக்கொண்டாடியபோது, காங்கிரஸ் பற்றுடைய மாணவர்கள், கலகம் செய்து, கூட்டத்தைத்தடை செய்ததுடன், விழாவுக்காகப் பறக்கவிடப்பட்டிருந்த கழகக்கொடியை அகற்றியும், கழக மாணவர்களைத் தாக்கியும், தங்கள் "வல்லமையைக்" காட்டினராம். உணவுவிடுதி சென்று, படித்துக் கொண்டிருந்தவர்களை, உறங்கிக் கொண்டிருந்தவர்களை, தாக்குதல் வருமென்ற நினைப்பற்று இருந்தவர்களைப், பலர் கும்பலாகக் கூடிக் கொண்டு தாக்கினதாகத் தெரிகிறது. ஆறு, ஏழு மாணவர்களுக்குப்பலத்த அடியாம். பிறகு திராவிடர் கழக மாணவர்கள் சுமார் அறுபதின்மர், நகரப்போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லபபட்டதுடன், மாணவருக்கு உறவினர் இருவர், மாணவரைக் காணவந்ததைக்காரணமாகக்கொள்ளாமல், அவர்கள், 'அடி ஆட்கள்' என்று கூறி, அவர்களையும், அதிகாரிகள், போலிசுக்கு அழைத்துச்சென்றனர் எனத் தெரியவருகிறது. இதுபற்றி, அண்ணாமலை நகரிலும், சிதம்பரத்திலும் பரபரப்பு இருக்கிறதென்றும், திராவிடர் கழக மாணவர்களைத் தாக்கி வெற்றிகண்டு விட்டோமென்ற களிப்புடன், காங்கிரஸ்பற்றுள்ள மாணவர்கள் களிப்படைந்திருப்பதாகவும் அறிகிறோம்.

ஆளவந்தார்கள் நமது கட்சியினர், ஆகவே அதிகாரம், நமது பக்கம் இருக்கும், அமைச்சரோ, திராவிடர் கழகத்தினிடம் கோபம் கொண்டவர். எனவே, நாம் எவ்வளவு அக்ரமமாகநடந்துகொண்டாலும்,ஏதும் இடர் வராது, சட்டமும் நம்மைத் தீண்டாது, சர்க்காரும் நம்மைக்கைவிடாது, என்று அந்த மாணவர்கள் கூறிக்களித்தனராம். இதுசகஜமான சபலம். எந்த மாணவர்கள், இன்று, போலிஸ், தம்பக்கம் இருக்கும், ஏனெனில், போலீசையும் ஆளும் நிலை தமது கட்சிக்கு ஏற்பட்டிருக்கிறது, என்று கருதிக்களிக்கிறார்களோ, அந்த மாணவர்கள், அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தின் பழைய ஏட்டினைப்புரட்டிப் பார்த்தால், திராவிடமாணவர் தாக்குண்ட படலத்துக்குப் பலப்பல பக்கங்களுக்குமுன்புள்ள பகுதியிலே,

பல்கலைக் கழகத்தில்போலீஸ்!
மாணவர்கள் தாக்குண்டனர்!
போலீசின் தடியடி தர்பார்!
மாணவருக்கு மண்டையிலடி!
மாணவர் விலக்கப்பட்டார்!
பல்கலைக்கழகப்பகுதிக்கு 144!

என்ற பல சம்பவங்களைப்பற்றிய குறிப்புகள் இருக்கக்காண்பர். அந்த நாட்களில் இருந்த, மாணவர்கள் பாலதண்டாயுதம், திரவியம் போன்றாரைக்கேட்டாலும் விஷயம் விளங்கும். அன்று போலீசார் காங்கிரசை ஆதரிக்கும் மாணவருக்குத் தாக்குதல்! இன்று, திராவிடமாணவர் தாக்குண்டனர், காங்கிரஸ் பற்றுக் கொண்ட மாணவர்களால். தாக்கியதுடனன்றி, அதிகாரிகளும்தமக்கே துணை நிற்கிறார்கள் என்று அகமகிழ்கிறார்களாம்!! எதைத், தமக்குற்றபுது வலிவு, புதுப்பெருமை என்று கருதிக்காங்கிரஸ் மாணவர்கள் களிக்கிறார்களோ, அவர்களுக்கு அதே அதிகாரம் தங்களை ஒருகாலத்தில் துரத்தித்தாக்கிவந்தது என்ற செய்தியைக் கவனமூட்டுகிறோம்—மகிழ்ச்சி, மறதி தந்திருக்கக்கூடுமாகையால். எங்ஙனம், அந்தத்தாக்குதலைக் காங்கிரஸ் மாணவர்கள் அந்த நாட்களில் தாங்கிக்கொண்டனரோ, அதுபோலவே, திராவிடர் கழக மாணவராலும்முடியும், என்பதையும், அதிகாரத்தின் தோழமையை, ஒருபதினைந்து வருடகாலம், ஏகபோகமாகப் பெற்றிருந்த ஜஸ்டிஸ்கட்சி கடைசிவரையில், வெற்றி காணவில்லை என்பதையும், ஆரம்பநாட்களிலே ஜஸ்டிஸ் கட்சி எதைப் பெருமைக்குரியது என்று கருதிவந்ததோ, அதே அதிகாரநேசத்தை இன்று நம்பும் காங்கிரசும்,மிகவிரைவிலே, தனக்குத்தானே கேடு தேடிக்கொள்கிறது என்பதையும் அந்த மாணவர்களுக்குக் கவனமூட்டுகிறோம். மாணவஉலகிலே, இத்தகைய'அமளியை' மூட்டிவிடச்சமயம் பார்த்துக்கொண்டிருப்பவர்கள், இதனை 'முற்றவிட' எண்ணுவர். நாம் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறோம்—பல திராவிடத்தலைவர்களும் ஏற்கனவே வேண்டுகோள் விடுத்தனர் என்றும் அறிகிறோம் — குரோதத்தைவளர்த்துக் கொள்ள வேண்டாம். தாக்குதலைக்கண்டு கோபமும் ஆத்திரமும் கொள்ள வேண்டாமென்று திராவிட மாணவர்களைக் கேட்டுக்கொள்கிறோம். அந்தத்தழும்புகள், திராவிட அரசுக்கான, அச்சாரங்கள்! அந்தத்தழும்புகள், யாருடைய தாக்குதலால் ஏற்பட்டனவோ அவர்களில் சிலரேனும், நாளை,தழும்புகளைக்கண்டு, வெட்கித்தலைகுனிந்து "அன்று நானுந்தான் தாக்கினேன்! தவறான கருத்துடன் இருந்ததால் தாக்கினேன்! தமிழன் உடலில் தமிழன் தாக்கித்தழும்பு ஏற்பட்டது!" என்றுகூறி வருந்திடக் காண்போம். புதியபலம் பெற்றதாகக் கருதிப் பூரிக்கும் அந்தத்தோழர்கள், பழைய பாதை வழியேதான் நடக்கிறார்கள் -செல்வாக்கைச்,சிதையாதபொருள் என்று தவறாகக் கணக்குப் போடுவது, அதிகாரம் நமது பக்கம் இருக்கிறது. ஆகவே அச்சம் வேண்டுவதில்லை, என்று எண்ணுவது, என்ற இந்தப் பழையபாதை! அந்தப் பாதை, என்றும் எவரையும், எந்த நாட்டிலும், வெற்றிக்கு அழைத்துச் சென்றதில்லை. அதுவீழ்ச்சிக்குவழி! வீரத்துடன் விவேகமும் கொண்ட திராவிடமாணவர்கள், இதனை மனதிற்கொண்டு, ஆறுதல் பெறுவது மட்டுமல்ல, நம்பிக்கையும் கொள்ள வேண்டும்.

ஆம்! நாம் தாக்கப்படுகிறோம், தமது செல்வாக்குச்சரிந்துவிடுகிறது என்ற கிலி கொண்டவர்களால்.

நாம் தாக்கப்படுகிறோம் நாடாள்வோரின் பலம் நமக்கு இருக்கிறது, என்று நம்பியதால் புதுமுறுக்கு பெற்றுள்ளவர்களால்.

நமக்கு முன்பு, கொள்கைக்காகப் பலர் தாக்கப்பட்டுள்ளனர்,

தாக்குதல்கள், கொள்கையைத் தகர்த்ததில்லை—இயக்கங்களை அழித்ததில்லை—மாருக, ஒவ்வொருதாக்குதலும், இயக்கத்தை வெற்றி பெற வைத்தன.

அந்தத்தாக்குதலும் இதுபோன்றதே.

நாம் தாக்கப்பட்டோம், எனவே, நாம் வெற்றிப்பாதையிலே வந்துவிட்டோம் என்று பொருள்.

நமது உடலிலே எழும் தழும்புகள், இன்பத்திராவிட அரசுக்கு, எழிலணிகள்! என்று இம்முறையில் எண்ணிடவேண்டும். கோபம்—சோகம்—சலிப்பு—ஆத்திரம இவை ஏதும் வேண்டாம்.

தாக்குதலா? ஆமாம்! பிறகு? பிறகு என்ன? அது ஓர் சம்பவம் —எமது பயணத்திலே நேரிடக்கூடிய பலவற்றிலே ஒன்று, அவ்வளவுதான். ஆனுல் பயணம் நிற்காது! என்று கூறிவிட்டுத் தமது பணியினைத் தொடர்ந்து நடத்தக் கேட்டுக்கொள்கிறேம்.

✲

# சிவபூஜையில் கரடி!

சிவபூஜையில் கரடி என்று பேச்சுக்குச்சொல்வார்கள் — அலங்கார உருவிலே, ஒருமுரணுன நிலையினை விளக்க. ஆனுல், இப்போது, நிஜமாகவே சிவபூஜையிலே கரடி புகுந்து கலாம் விளைத்துவிட்டது. உண்மை நிகழ்ச்சி—கட்டுஅல்ல, கதைஅல்ல. லட்சுமணபுரியில், ஒரு கரடி, யாராலோ, வளர்க்கப்பட்டு வந்தது. அது திடீரென்று, என்னஎண்ணிக்கொண்டதோ தெரியவில்லை, கட்டுகளை அறுத்துக்கொண்டு ஓடிவிட்டது. துரத்தினர் சிலர். பலரைக் கரடி துரத்திற்று. மக்கள் பயந்து போயினர். கரடி, வெற்றிக் களிப்புடன், நேரே, ஒருகோயிலுக்குச் சென்று, அங்கு விக்ரஹத்துக்கு எதிரே, அருகாமைல் உட்கார்ந்து கொண்டதாம். கரடி வேடிக்கை செய்யும் அளவுக்கு, அதைப்பழக்கி வந்தவன், கட்டு அறுத்துக்கொண்டு ஓடின கரடியைத் 'தேடிக்கொண்டிருக்கிறுன், லட்சுமணபுரியில். கரடியோ, கோயிலிலே,உருவச்சிலைக்கு எதிரே உட்கார்ந்து கொண்டிருக்கிறது.

வழக்கமாகக் கோயிலுக்கு வரும் பக்தர்கள் அன்றும் வந்தனர், பக்தியுடன்பரமனைத்தொழ, அவன் நாமத்தைப்பஜிக்க, கோயிலுக்குள்ளே சென்றதும், ஐயோ, என்று அலறி அடித்துக்கொண்டோடினர்— கடவுளுக்கருகில் கரடி இருக்கக்கண்டு! பக்தர்களைக்கண்ட கரடி, அவர்களை விரட்டி அடித்ததாம். கரடியைப் பழக்கியவனே வந்தான், கரடி அவனுக்கும் அடங்க மறுத்துவிட்டது. கரடி, தன்னிடம் பலநாள் அடங்கிக் கிடந்ததுதானே, இப்போதும்,மிரட்டினுல் பணிந்துவிடும் என்று எண்ணினுன். கரடியோ, அவனைத்தாக்கிக், காயப்படுத்தியும் விட்டது —அவனும் ஓடிவிட்டான். பிறகு, போலீசார் நுழைந்து, மிகுந்த கஷ்டப்பட்டுக், கரடியைப் பிடித்துச் சென்றனர். பிறகு பக்தர்கள், பயம் நீங்கிப்பரமனைத்தொழவந்தனர். சம்பவம்,நல்லவேளையாக, நமது நாட்களிலே நடைபெற்றது - சின்னுட்களுக்கு முன்பு. இதே சமபவம், நமது மூதாதையர் காலத்திலே, —மூதாதையர் என்றுல் மிகமிகப்பழம்காலத்திலேஎன்றுகூட எண்ணிவிடவேண்டாம்-நமது பாட்டனுர்காலத்திலே, நடைபெற்றிருந்தால், அதிலும் லட்சுமணபுரியிலே நடைபெறுவதற்குப் பதிலாக, இங்கு, தமிழ்நாட்டிலே நடைபெற்றிருந்தால், இன்னேரம், கரடீஸ்வரர் ஆலயம் கட்டும் திருப்பணியும், கரடீஸ்வரர் திருவந்தாதிபதிப்பிக்கும் புண்ய காரியத்தையும், ஏற்றுக்கொண்டு, பலர்பணிபுரிய முன்வந்துவிட்டிருப்பர். "கரடி, உண்மையிலே கரடி அல்ல — பூர்வஜென்மத்தில், ஒருதவசி, நெடுங்காலமாக நெருப்பிலேயே நின்று கடுந்தவம் செய்து வந்தார். அவருடைய உறுதியைப் பரிசோதிக்கவேண்டிக், கடவுள், பிரசன்னமாகாது இருந்ததுடன், அவருக்கு, மனமயக்கம எவ்வளவுஇருக்கிறது என்று சோதனை செய்ய,மானசீகமாது ஒருவளைச் சிருஷ்டித்து, முனிவர் எதிரே அனுப்பினுர். முனிவர், அந்தமாதின் கூந்தல் அழகைக் கண்டு, மயங்கி, அவளை அணுகிக் கொஞ்சிடலானுர். கூந்தலைக்கோதி முடித்து, காட்டுரோஜாவை அதிலே செருகி, அந்தக்காட்சியைக் கண்டு இன்புற்றுர், கடுந்தவம் புரிந்துவந்தவர், கற்றைக்குழலாளைக் கண்டு காமுற்றது கண்ட கடவுள், கடுங்கோபம் கொண்டு, ஏ! காமாந்தகாரத்தைவிரட்டத் தெரியாத கசடனே! எந்தக்கூந்தலைக்கண்டு,நீ உன் மனதைப்பறி கொடுத்தாயோ, அந்த ரோமம் உடலெங்கும் கொண்ட கரடியாக நீ பிறந்து உழலக்கடவாய்" என்று சாபமிட்டார், என்பதாக கதைபுனைந்து, கவிதைஇயற்றி, அந்தக்கரடியேதான், சாபவிமோசனத்துக்காக, லட்சுமணபுரிக் கோயிலிலே சென்று, பூஜை செய்தது, என்று கூறி விளக்கமறியா மக்களை நம்பும்படி செய்து, உடனே கரடீஸ்வரர் கோயில்கட்டுவதற்கான துவக்க விழாவை நடத்தியிருப்பர். அந்தத் திருப்பணிக்குக், கனதனவான்கள் பணம் தந்திருப்பர் — இசைவாணர்கள் தமதுஇசையைவழங்கிஇருப்பர் —கோகிலகானங்களும், கோமளவல்லிகளும் நான், நீ,என்றுபோட்டியிட்டுக்கொண்டு, கச்சேரிகள்நடத்தியிருப்பர். நல்லவேளையாக, சுயமரியாதை உணர்ச்சியும், அறிவு ஒளியும் சற்று அதிகமாகப் பரவி இருக்கிற காரணத்தால், கோயிலுக்குள் கரடி புகுந்தது —பக்தர்கள் மிரண்டோடினர்—என்ற அளவோடு எழுதிவிட்டனர். சிவபூஜையில் கரடிபுகுந்தது என்ற பழமொழி, நிஜமொழியுமாகி விட்டது.

✲

மதிப்புரை.

## "நிலவு"

(திங்கள் இதழ்)

தனி இதழ் **0—4—0**

ஆண்டுக்கட்டணம் **3—0—0.**

தோழர் பூ. கணேசன் B A., (Hons) அவர்களை ஆசிரியராகக் கொண்டுள்ளது. சிந்தனையைத்தூண்டும் கட்டுரைகள், சமுகத்தின் இழிந்தநிலையை எள்ளிநகையாடும் சிறுகதைகள், ஆராய்ச்சிமிக்க ஆணித்திறமான அரசியல் கருத்துக்கள் நிரம்பியுள்ளன. திராவிடர் கழகத்தின் நற்கருத்துக்களை நாட்டிடை பரப்பும் பெரும்பணியில் ஈடுபட்டுள்ளது. 'நிலவு' இதழினை ஒருமுறை பார்க்கும் வாய்ப்பினைப் பெற்றவர்கள், தொடர்ந்து பார்ப்பதிலேயே ஆர்வம் கொள்வர். மேல் அட்டை கவர்ச்சிகரமானதாக இருக்கிறது. தமிழர், எக்கட்சியினைச் சேர்ந்தவராக இருந்தாலும், நிலவை ஆதரிக்கவேண்டுமென விரும்புகிறேம்.

கிடைக்குமிடம் :—

நிர்வாகி
"நிலவு" நிலையம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

# மற்றுமோர் முயற்சி

பல திறப்பட்ட திராவிடர்களையும், நாட்டுப் பிரிவினைப் பிரச்னை வரையில் ஒத்துழைக்கக் கூடியவர்களை, அவர்கள் பட்டதாரிகள், பதவிப் பிரியர்கள், நீறு பூசிகள், நாமதாரிகள், தேர்தல் பிரியர்கள், எனும் எவ்வகையினராக இருப்பினும், ஒரே முகாமில் கொண்டுவருவதற்காகச், சில நாட்களுக்குமுன்பு, கடலூரில், திராவிட நாடு பிரிவினை மாநில மாநாடு தோழர் S. முத்தையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அந்த முதல் முயற்சிக்குப் பிறகு அவ்விதமான, கூட்டு அணி வகுப்புகள் மேலும் தேவை என்ற எண்ணம் கொண்டவர்கள், உற்சாகத்துடன் வேலை செய்யத் தொடங்கியுள்ளனர்.

தமிழரின் பாதுகாப்புக்காகவும், சென்னை நகர் தமிழருக்கே யன்றி ஆந்திரருக்கு அல்ல என்பதைத் தெளிவுபடுத்தவும், மற்றும், தமிழரின் நலனைக் கவனிக்கவும், பல கட்சித் தமிழர்களின் மாநில மாநாடு, ஒன்றினைச் சென்னையில் நடத்தும் முயற்சி துவக்கப்பட்டிருக்கிறது. இதற்கான ஆரம்பக் கூட்டம் சென்ற கிழமை, சண்டே அப்சர்வர் ஆபீசில் நடைபெற்றது.

தோழர் S. முத்தைய முதலியார் தலைமை வகித்தார்.

மாநாட்டு வேலைகளைக் கவனிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது.

கமிட்டிக்குத் தலைவர், தோழர் S. வெங்கடேச ஐயங்கார்.

காரியதரிசிகள், பாரிஸ்டர் சுப்ரமணியம் செட்டியார், சண்டே அப்சர்வர் பாலசுப்பிரமணிய முதலியார்.

மற்றும் பலர் கமிட்டி அங்கத்தினர்கள்.

திராவிட நாடு பிரிவினை விஷயமாக, எப்படி, மத, சமூக, அரசியல், பொருளியல் கருத்து வேற்றுமைகள் இருந்தாலும், பல திறப்பட்ட திராவிடர்களும், ஒன்று கூடலாமோ, அதுபோலவே, தமிழரின் நலனுக்காக, நடத்தப்படும் முயற்சியில், தமிழர் என்ற உணர்ச்சி கொண்ட பார்ப்பனர்களையும் சேர்த்துக் கொள்ளலாம், என்ற நோக்கத்துடனேயே, மேற்படி கமிட்டிக்கு, S. வெங்கடேச ஐயங்கார், தலைவராக்கப்பட்டிருக்கிறார்.

வடநாட்டு ஆதிக்கம் கூடாது, தென்னாடு தனித்து இயங்க வேண்டும், என்ற அளவு வரையிலே, ஒத்துழைக்கவும், வடநாட்டு, அரசியல் பொருளாதாரப்பிடிப்பிலிருந்து விலகித், தனி அரசு நடத்தும் முயற்சிக்கு ஆக்கம் தருவதாகப், பல, பார்ப்பனத் தலைவர்கள், சம்மதம் கூறியிருப்பதாகவும், அவர்களின் ஒத்துழைப்பைப்பெற, கூட்டு முயற்சிக்காக, திராவிட நாடு பிரிவினை என்று கூறினால், ஆரியர்-திராவிடர் என்ற இன பேத உணர்ச்சி வருவதால், கூட்டு முயற்சி தடைப்படுவதாகப் பார்ப்பனத் தலைவர்கள் கூறுவதால், விரைவில், அவர்களையும் திருப்திப்படுத்த, திராவிடநாடு பிரிவினை என்பதைத் திருத்தி, தனித்தென்னாடு அரசு அமைப்புக்கழகம் என்ற இயக்கத்தைக் காணவும், அதற்கான ஆரம்ப மாநாடு நடத்தவும், ஓர் முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

✲

5-ம் பக்கத் தொடர்ச்சி

பிக்கும் நிலையிலேயே இன்று ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. ஆசிரியரை நினைக்கும் போதே தோன்றும் அச்சம் குழந்தைகளை விட்டு நீங்கவேண்டும். படிக்கப் போகிறோம் என்பதற்குப் பதிலாக விளையாடப் போகிறோம் எனும் நினைப்பு உண்டாகுமாறு போதனை முறை மாற வேண்டும்.

கவர்ச்சி மிக்க இயற்கை அமைப்பின் மத்தியில் பள்ளிகள் அமைக்கப் பட வேண்டும். ஒவ்வொரு பள்ளியிலும் குழந்தைகள் பார்ப்பதற்கெனப் படக் காட்சிச் சாலைகள் ஏற்படுத்த வேண்டும். ரேடியோ வசதியும் செய்யவேண்டும். சிறுவர்களை எழுதின நாடகங்களை நடிக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். சிறு நூல நிலையமும், விளையாட்டு நிலையமும், பொருட் காட்சி சாலையும் கொண்டதாக இருக்க வேண்டும்.

வேறுசெயலில் குழந்தையின் கவனத்தை ஈர்ப்பது குழந்தையின் கல்வி வளர்ச்சியைக் கெடுப்பதேயாகும். பெண் ஆண் எனும் பேதம் காட்டாமல் ஒன்றாகவே சேர்த்துப் பயிற்சி அளிக்க வேண்டும். குழந்தைகளுக்குக் கல்வியளிப்பதில் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் ஆசிரியைகளாக இருப்பதே விரும்பக் கூடியதாகும். துவக்கக் கல்விக்குப் பின்னர் அவசியமான பாடங்களைப் போதிக்கலாம். ஆங்கிலத்தை உபபாடமாக வைக்க வேண்டும். ஆங்கில ஏகாதிபத்தியத்தினால் நம் வாழ்வு சீர் குலைந்ததை ஆதாரமாக வைத்துக்கொண்டு, ஆங்கில மொழியை அடியோடு நீக்கவேண்டுமென்பது அறிவுடைமையாகாது. நீண்ட அடிமை வாழ்வில், நமக்குக்கிடைத்த இரண்டொரு நன்மைகளில் ஆங்கில மொழியும் ஒன்றாகும். இங்கு குறித்துள்ளபடி கல்வி முறை மாற்றத்தால் வரப்போகும் புதிய உலகிற்கான புதிய மனிதர்களை உருவாக்க மார்க்கம் உண்டாகும்.

✲ நமது மக்கள் ஒவ்வொருவரும் இலவச ஆரம்பக் கல்விக்கு உரிமை உடையவர்கள் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். துவக்கக் கல்வியிலிருந்து கலாசாலைப் பயிற்சி வரையில் நவீன அறிவைப் போதித்தாலன்றிப் புது வாழ்வைக் காணமுடியாது.

✲ ரேடியோ, படக் காட்சி ஆகியவற்றால் முதியோர் கல்வியின்மையைப் போக்க வேண்டும்.

✲ சகல கல்விக்கும் பொருள் உதவி செய்யும்பொறுப்புச் சர்க்காருடைதாகவே இருக்க வேண்டும்.

✲ சர்க்காரால் நடத்தப்பெறும் பள்ளிகளில் மத போதனை அளித்தல் அறவே நீக்கப்படவேண்டும். மதபோதனை செய்யும் கல்வி நிறுவனங்களுக்குச் சர்க்கார் பணஉதவி செய்தல் கூடாது.

✲ இந்தியாவிலுள்ள வட்டாரங்களிலெல்லாம் அங்கங்குள்ள தாய் மொழியிலேயே பாடம் கற்பிக்கப் பட வேண்டும்.

மக்களுக்கு இயல்பாக உள்ள உணர்ச்சிகளை ஒன்றுபடுத்திப் பொதுநலப்பண்பாட்டின் பக்கம் திருப்புவது சமதர்ம சமுதாயத்திலேயே சாத்தியமாகும். இருந்தாலும் குழந்தைகளுக்குள்ள 'செயல்' ஆற்றும் ஆர்வத்தை, கல்வியில் முடிந்த நோக்கமான விடுதலைப் பாதைக்குப் பண்படுத்துவது, அதற்கான துவக்கமாகும்.

தற்காலம் உள்ள கல்வி முறையைப் பற்றியும், எவ்வாறு அதனை மாற்றுவது என்பது குறித்தும் Dr. முல்க்ராஜ்ஆநந்த் என்பவர் ஒரு சிறுநூல் செய்துள்ளார். அவரது கருத்தில் சிலவற்றையும் சுருக்கித் தந்துள்ளோம் இக்கட்டுரையில்.

●

# திருவாங்கூர் தமிழர் கிளர்ச்சி

[S. K, சுவாமி]

திருவாங்கூரில் வாழும் பதினைந்து லட்சம் தமிழர்களின் நிலைமை மிக்க பரிதாபகரமானது! எங்கு பார்த்தாலும் திருவாங்கூர் சமஸ்தானத்தில் தமிழர்கள் ஒதுக்கப்பட்டே வருகிறார்கள். அரசியல் துறையில் போதிய பிரதிநிதித்வமளிக்கப் படவேயில்லை. மலையாளிகளால் மிக்க ஏளனமாக இவர்கள் கருதப்பட்டு வருகிறார்கள். இதுபற்றிப் புள்ளி விவரங்களுடன் இதற்குமுன், ஒரு கட்டுரையில் நாம் விளக்கியிருந்தோம்.

தமிழர்கள் பொதுவாகப் பொறுமைசாலிகள் என்ற நல்ல பெயர் எடுத்தவர்கள்தான்; என்றாலும் பொறுமைக்கும் ஓரளவு உண்டல்லவா! திருவாங்கூரில் தமிழர் வீறுபெற்று எழுந்தனர்; தமிழர் மானம் கப்பலேறுவதைப் பார்த்து மனம் கொதித்தார்கள் தமிழ் வாலிபர்கள். ஐக்ய கேரள அமைப்புச் சூழ்ச்சி வலை கொச்சி மன்னரால் வீசப்பட்டுச் சமஸ்தான காங்கிரஸ் என்ற போர்வையில் பதுங்கிக் கிடக்கும் மலையாள காங்கிரஸ் பேராதரவு கொடுத்து வளர்த்து வருகிறது. மலையாளக் காங்கிரஸ் தலைவர் திரு. பட்டம் தாணுப்பிள்ளையும் அவரது மலையாளிசாகாக்களும் பிரசாரம் செய்து வருகிறார்கள். திருவாங்கூரிலுள்ள தமிழர்களுக்குப் பாதுகாப்புகளும் கொடுக்க மறுத்து மாயப் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் கேட்பது என்ன? "ஐயா, எங்களுக்கு இந்த சமஸ்தானத்துக்குள்ளேயே தனித் தமிழ் மாகாணம் (A Tamilian Province in Travancore) அமைக்க உதவுங்கள்; அல்லது நாங்கள் அமைக்கிறோம். வாயைப் பொத்திக்கொண்டு சும்மாயிருங்கள் மொழிவாரியாக மாகாணங்கள் இந்தியாவில் எற்படும்போது நாங்கள் தமிழ் மாகாணத்தோடு சேர்ந்து கொள்கிறோம். நாம் எல்லோரும் சகோதரபாவத்துடன் வாழ்வோம்." இதைத்தான் திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் கேட்கிறது.

அதுதான் போகட்டும்; இதை நாங்கள் அனுமதிக்கிறோமென்று சமஸ்தான காங்கிரஸ் ஒருதீர்மானம் நிறைவேற்றித் தரட்டும். அல்லது தலைவர் பட்டம் தாணுப்பிள்ளை அவர்கள் ஒருஅறிக்கை வெளியிடவேண்டுமென்று தமிழர்களின் இயற்கைப் பண்புக்கேற்ப மரியாதையாகக் கேட்டார்கள். பலமுறை கேட்டுப்பார்த்தார்கள். செவிடன் காதிலே ஊதின சங்காயிற்று பலன். உடனேயேபட்டம் தாணுப்பிள்ளையும் இதர மலையாளிகளும் தமிழர்களிடையேயிருந்து, முதலாளிக்கும்பலில்சிலரைப் பதவியென்னும் மாய வலை வீசிப்பிடித்துக் கொண்டார்கள். தலையாட்டித் தம்பிரான்களும், மருந்துக்குக்கூடப் பொதுநலம் பேணாத மேற்குறித்த பணம்படைத்தகுழுவினரில்சிலர் எதிரியின் பாசறையில் கலந்து கொண்டனர். விபீஷணர்களானார்கள். ஆனால் இராமாயணக் கதையிலுள்ள விபீஷணர் மாதிரி மகுடம் இவர்களுக்குக் கிடைக்கவில்லை யென்பது மட்டுமல்ல; மண்டையிலும் அடிக்கப்பட்டார்கள்.

இந்தத் துரோகிகளின் செய்கை தமிழர் வாழும் திருவாங்கூரிலுள்ள மூலை முடுக்குகளிலும் சந்துபொந்துகளிலும் கண்டிக்கப்பட்டது. விரல் விட்டு எண்ணக் கூடிய துரோகிகளின் செயலுக்காகப் பதினைந்து லட்சம் தமிழர்களும் அவதிப்படுவதா? மானமிழப்பதா? மரியாதை கெடுவதா?

தமிழன் இரத்தம் கொதித்தது. இளைஞர்கள் எழுந்தனர். ஒன்று கூடினர். திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் வலுத்தது. தமிழன் துரோகம் செய்வது, தமிழர் உள்ளங்களில் நெருப்பை அள்ளி வீசியது. திரு. இராமன் பிள்ளை என்ற தமிழன் குமரி முனையில் பட்டினிகிடந்து சாகத் தீர்மானித்தான். எட்டுநாள் இரவு பகல் பட்டினி. துரோகம் செய்த தமிழர் சோகம் கொண்டனர்; பிழையையுணர்ந்தனர்; மலையாளிகளின் சதியை அறிந்தனர்.

எல்லாத் தமிழர்களும் ஒன்றுகூடித் திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸை உறுதிப்படுத்தினர். ஜாதி—சமய பேதமின்றித் தமிழர்கள் திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸில் கலந்தனர். சமஸ்தான சர்க்கார் நிலைமையை நன்குணர்ந்தனர் திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரை அழைத்துப்பேசினர். மலையாள காங்கிரஸ் ஸ்தாபனமாகிய சமஸ்தான காங்கிரஸும் தமிழர்களை இனியேமாற்றுவது எளிதல்ல என்று தெரிந்து கொண்டது. ரகசியமாகச் சமரஸத்தூது அனுப்பி வருகிறார்கள். ஆனால் நியாயத்தை ஒப்புக்கொள்வதற்கு அவர்கள் மனதிலுள்ள சுயநலப் பாம்பின் நச்சுப்பை இன்னும் தடை செய்து வருகிறது; படமெடுத்தாடிய நாகபாம்பு இப்போது படுத்துக்கொண்டிருக்கிறது. சந்தர்ப்பம் கிடைத்தால் இன்னும் படமெடுத்தாடும்.

இந்தச் சந்தர்ப்பத்தில், இது, திருவாங்கூர் தமிழர்களுக்கு ஒரு எச்சரிக்கையாகும். வெளிப்படையாகப் பல மலையாளிகள் நியாயத்தைக் கூறக் கூசினாலும் அவர்களுக்குள்ளே, "என்னவானாலும் திருவாங்கூர்த்தமிழர் பிரச்னையில் நியாயமிருக்கிறது" என்று பேசத் தொடங்கியிருக்கிறார்கள். வெளியிடங்களிலுள்ள தமிழர்கள் இதில் விசேஷ சிரத்தை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். நாட்டு நலத்தில் நாட்டங்கொண்ட கட்சிகள் நியாயத்தை வெளிப்படையாகச் சொல்லுகிறார்கள். சென்னையில் வாழும் திருவாங்கூர்த் தமிழர்சங்கம் இந்தக் கோரிக்கைகளைப் பிரசாரம் செய்து வருகிறது. தமிழர்கள் விழிப்படைந்தும் வருகிறார்கள்.

திராவிடநாட்டுப்பிரிவினைக்குத்திருவாங்கூர்த்தமிழர் பிரச்னை பாதகமானதல்ல, மொழிவாரியாக மலையாளம், கன்னடம், தெலுங்கு, தமிழ் ஆகிய நான்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டு, அவையனைத்தும் ஒரு பெடரேஷனில் இருக்க வேண்டுமென்பதுதானே-இதற்குத்திருவாங்கூரில் பட்டுமல்ல, புதுக்கோட்டை, மைசூர் முதலிய சமஸ்தானங்களில் வாழும் தமிழர்கள் பிரச்னை கவனிக்கப்பட வேண்டுவதும், அவர்களின் கிளர்ச்சிக்கு ஆதரவளிக்கவேண்டுவதும் நியாயமும், இயக்க வேலைகளில் முக்யமானதும் தானே.

திருவாங்கூரிலுள்ள தமிழர்—மலையாளி தகராறை உடனேதீர்த்து வைக்க வேண்டுவதின் தேவையையும், திருவாங்கூர் சமஸ்தான காங்கிரஸ் இதையுணர்ந்து நடக்கவேண்டுமென்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் திரு. ஈ. எம் நம்பூதிரிபாட் வெளியிட்டிருக்கும் அறிக்கையும் ஆலோசனைகளும் கவனிக்கத் தக்கவையாகும். திரு-நம்பூதிரிபாட்

(2-ம் பக்கம் பார்க்க)

4-ம் பக்கத் தொடர்ச்சி

கணவனுக்கு உண்மையை மறைத்தல் தவறன்றோ" என்ற இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையை அடைந்து, பின் ஒருவாறு தெளிந்து நிகழ்ந்ததைக் கூறுகின்றாள். கடவுளிடத்து நம்பிக்கையில்லாத பரமதத்தன், அது கேட்டதும், "சிவனருளோ" என்று வியப்படைந்தவனாய், 'அப்படியாயின் அவனருளால் இன்னுமொரு கனி கொண்டுவா" என்று கூறுகின்றான். உடனே புனிதவதியார் அவ்விடம் விட்டகன்று, சிறிது நேரத்திற்குள் இன்னொரு மாங்கனியையும் கொண்டுவந்து கணவனிடம் கொடுக்க, அது உடனே மறைந்துவிட்டதாகச் சொல்லப்படுகின்றது.

புனிதவதி, தன்கணவனால் கொடுத்தனுப்பப்பட்ட மாங்கனிகளில் ஒன்றைப் பசித்து வந்த ஒரு சிவனடியாருக்குக் கொடுத்ததைத் தன் கணவனிடம் கூறாமல் மறைக்கிறாள். கணவன், "இது போன்ற ஒரு மாங்கனி இன்னும் உளது, அதனைக் கொண்டுவா" என்று கூறிய சமயத்தில், அவள் என்ன கூறியிருக்க வேண்டும்? "தாங்கள் கொடுத்தனுப்பிய மாங்கனிகளில் ஒன்றை, வெம்பிய பசியால் வாடி வந்த ஒரு அடியவருக்குக் கொடுத்துவிட்டேன்" என்றன்றோ கூறியிருத்தல் வேண்டும். ஒருவேளை கடவுளிடத்து நம்பிக்கை இல்லாத பரமதத்தனுக்கு அச்செய்கை விரும்பத்தக்கதாய் இராதென்றாலும், வாய்மைகரு உறைவிடமாகப் பேசப்படும் புனிதவதியார் உண்மையை மறைக்கலாமா? "இன்னும் ஒரு கனி கொண்டுவா" என்று கணவன் கூறியவுடன், அந்த அம்மையார் ஏன் அவ்விடம் விட்டு வேறு ஒரு தனியிடம் செல்ல வேண்டும்? கணவன் முன்னிலையில் நின்று கடவுளை வேண்டினால், புனிதவதியாரின் புனிதத்தன்மையை மெச்சி அந்தக் கடவுள் ஒரு மாங்கனியைக் கொடுக்கமாட்டாரா? கடவுளைத் தனியாகக் கண்டு, அவரிடமிருந்து ஒரு மாங்கனியைப் பெறக் கருதினாள் புனிதவதியார் என்று கூறப்படுவதின் பொருள் என்ன? ஓரவஞ்சனையின்றி ஆராய்வோருக்கு இதன் உண்மை விளங்காமற் போகாது.

மாங்கனியைப் பெற்றுக்கொண்டதாகச் சொல்லப்படும் அந்த அடியவர், பரமதத்தன் வீட்டுக்கு வரும் சமயத்தில், அங்கேயே இருந்திருப்பார்; கணவன் வருகின்றார்என்பதை அறிந்த புனிதவதியார், அந்த அடியவரைத் தம் வீட்டுக்குள் எங்காவது மறைந்திருக்கும்படி செய்திருப்பார்; பின்னர், கணவன் மாங்கனி கேட்டபோது, உள்ளேபோய் அந்த அடியவரிடமிருந்த கனியை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்திருப்பாள். இதுவே உண்மையாக இருக்கமுடியும். இல்லையேல், கணவன் மாங்கனியைக் கேட்டவுடனே, கனிகிடைக்கும் என்ற முழு நம்பிக்கையுடன் ஒருபெண், வீட்டுக்குள் போய்இருக்கவே மாட்டாள். கனிவைத்திருக்கின்ற ஆள் உள்ளே இருக்கின்றார் என்ற தைரியத்தினாலே தான், கணவன் கனிகேட்டவுடன், நடந்ததையும் கூறாமல், அவ்விடத்தைவிட்டு மெள்ள நழுவியிருக்கிறாள். இல்லையேல், கணவன் கனிகேட்டவுடன், "உள்ளேபோனால் கடவுள் கனி கொடுப்பார்" என்ற நம்பிக்கைஅந்த அம்மையாருக்கு எப்படி உண்டாகியிருக்கமுடியும்? அதற்கு முன்னர் இப்படி ஒருநிகழ்ச்சி—அதாவது கடவுளிடமிருந்து கனியோ அன்றி வேறு பொருளோ பெற்றிருக்கிறாள்; எனவே மாங்கனியும் பெற்றிருக்கக் கூடும் என்று கூறலாம். ஆனால், அந்த அம்மையாருக்கும் அம்பிகைபாகனுக்கும் அதற்குமுன் எந்த விதமான தொடர்போ அறிமுகமோ இருந்ததாகப் புராணத்திற் காணப்படவில்லை. சிவனிடத்தன்பு பூண்டு, சிவனடியாருக்கமுதூட்டி வந்தாள் என்று மட்டுமே சேக்கிழார் கூறியுள்ளார். இது, சிவ அன்பர்கள் என்று சொல்லப்படுபவர்கள் எல்லாராலுமே சாதாரணமாகக் கையாளப்படக்கூடிய ஒரு நடைமுறைச் செயலாகும்.

எனவே புனிதவதியார், தாம்சிவனிடத்தும் அவரடியவரிடத்தும் அன்பு பூண்டொழுகுங் காரணத்தையே அடிப்படையாகக் கொண்டு, அதனால், ஆண்டவன் தாம் வேண்டும் மாங்கனியை அருள்வான் என்ற நம்பிக்கையோடு, அதுவும் கணவன், "இன்னொரு கனியையும் கொண்டுவா" என்று கேட்டவுடன், திடீரென்று வீட்டுக்குள் போனாள் என்றால், அது, முன்ஏற்பாட்டின்படி, அதாவது, கனி வைத்திருக்கின்ற ஆள் உள்ளே இருக்கின்றான், கவலையில்லை என்ற நம்பிக்கையில் சிறிதும் ஐயப்பாடு கொள்ளாத முறையில் நடத்தப்பட்ட ஒரு திருவிளையாடலாகும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இனி, ஆண்டவனிடமிருந்து பெற்றதாகச் சொல்லப்படும் இன்னொரு மாங்கனி, உடனே மறைந்துவிட்டதாகவும் சொல்லப்படுகின்றது. இந்தக்கனி மறைந்த மாயம் என்ன? ஆண்டவனால் அருளப்பட்ட ஒருகனி மறையாமல், அதனைப் பரமதத்தன் உண்டு சுவைக்கும் நிலைமையும், அதே ஆண்டவனருளால் கிடைக்கப்பெற்ற இன்னொரு மாங்கனி மட்டும் அவனால் உண்ணப் பெறாமல் மறையக் காரணம் என்ன? காய்தல் உவத்தல் இன்றிக் கருத்தோடுஒன்றிய நடுநிலையாளர்க்கு இதன் உண்மையாதென்பது விளங்கும். முன்னைய இருமாங்கனிகள் பரமதத்தனால் கொடுத்தனுப்பப்பட்டவை என்பதும்; அதில் ஒன்று, கணவன் இல்லாத சமயத்தில் தன் வீட்டுக்கு வந்த அடியவருக்குக் கொடுக்கப்பட்டதென்பதும்; பின்னர் கணவன் வீட்டுக்குவந்தபோது, அந்த அடியவரை மறைந்திருக்கும்படி செய்யப்பட்டதென்பதும்; கணவன் மாங்கனி கேட்டபோது, அடியவரிடமிருந்த கனியையே அந்த அம்மையார் வாங்கிக் கொண்டுவந்து கொடுத்தார் என்பதும்; மூன்றாவது மாங்கனிக்கதை, கடவுளுண்மையை நிலை நாட்டுவதற்காகச் சேக்கிழாராலோ அன்றி நம்பியாண்டார் நம்பியாலோ புனைந்துரைக்கப்பட்ட பொய் என்பதும் தெள்ளிதில் உணரக்கிடக்கும் மறுக்கமுடியாத உண்மைகளாகும்.

இனிப், புனிதவதியார், கணவன் வருவதறிந்ததும், அந்த அடியவரை மறைந்திருக்கும்படி செய்ததற்குக் காரணமென்னவென்றால், பரமதத்தன் இயல்பாகவேகடவுளிடத்துநம்பிக்கையில்லாதவன். கடவுளிடத்து நம்பிக்கை இல்லாத ஒருவன், கடவுள் பெயரைச் சொல்லிக்கொண்டு, ஊரை ஏமாற்றி வயிறு பிழைக்கும் பித்தலாட்டக்காரர்களை ஒரு போதும் நம்பவே மாட்டான். எனவே தான், கணவன் வருவதறிந்த புனிதவதியார், அந்த அடியவரை மறைந்திருக்கும்படி செய்திருக்கிறார். பரமதத்தன் கடவுளிடத்தில் நம்பிக்கை இல்லாதவன் என்பதை,

"ஈசனருள் எனக்கேட்ட இல்
லிறைவன் அது தெளியான்"

என்ற சொற்றொடரால் விளக்கி

யுள்ளார். இச்சொற்றொடருக்கு, "திருவருள் நெறியில் நில்லாதவன்" என்று பெரியபுராண அருப்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரை எழுதிய திரு வி. க. கூறுகின்றார். எனவே, பரமதத்தன் கடவுளிடத்து நம்பிக்கை கொள்ளாத ஒரு பகுத்தறிவாளன் என்பது இதனால் பெறப்படுகின்றது.

இனிப், பரமதத்தன், தான் அனுப்பிய மாங்கனிகளில் ஒன்றை உண்டு சுவைத்தபின், எஞ்சியுள்ள இன்னொன்றையும் தானே சுவைக்க விரும்பியது தவறென்றும், அக்கனி தன் துணைவிக்குரியதென அவன் எண்ணியிருத்தல் வேண்டுமென்றும், இனிமையைத் தான் மட்டும் நுகர அவன் விரும்பியது தன்னலமென்றும் பெரிய புராண உரையாசிரியர் கூறுகின்றார். மிகவும் சரி. அங்ஙனம் செய்வதுதான் கணவன் மனைவியருக்கிடையே இருக்கும் உளங் கலந்த அன்பு நிலையைக் காட்டுவதாகும். ஆனால், புனிதவதியார் செய்கை மட்டும் தன்னலமற்றதென்று உரையாசிரியர் கருதுகிறார் போலும்! புனிதவதியார், தாம் அடியவருக்குக் கொடுத்த மாபழக்கதையைத் தன் கணவனிடம் கூறாது மறைத்தது, தன்னலம் மட்டுமல்லத், தன் கணவனுக்குத் தெரியாமற் செய்யும் துரோகமுமாகும். ஒருகடவுளிடத்து அன்பு பூண்டொழுகுவதைக் கூடத் தன் கணவனிடம் கூறாது மறைக்கும் அளவுக்கு அவள்பால் வஞ்சனை குடிகொண்டுள்ளதென்றால், அவளால் செய்யப்படும் மற்றக் காரியங்களைத் தன் கணவனிடம் கூறுவாள் என்று எப்படி எதிர் பார்க்க முடியும்.!

இனி, "நாயகனும் நாயகியும் ஒரு மாட்டின் இருகொம்புகள் போன்றவர்" என்று உரையாசிரியர் கூறுவதற்கேற்ப, அவ்விருவரும் ஒற்றுமையாக வாழ வேண்டுமானால், அவ்விருவருடைய மனநிலையை அறிந்தே அவர்களைக்கணவன் மனைவியராக்கியிருத்தல் வேண்டும். அதாவது தன்னை மணக்க வரும் ஆணின் மனநிலையைப் பெண்ணும், பெண்ணின் மனநிலையை ஆணும் அறியும் உரிமையை அவ்விருவருக்குமே அளித்து, அவ்விருவர்பாலும் மாறா ஒற்றுமை நிலவுகின்றதென்பதை ஐயந்திரிபற உணர்ந்த பின்னரே அவர்கள் இருவரையும் வாழ்க்கைத் துணைவராக்கியிருத்தல் வேண்டும். அங்ஙனமன்றிக், கடவுளிடத்தில் நம்பிக்கையில்லாத ஒருவனையும், கடவுளிடத்தில் நீங்காத அன்பு பூண்ட ஒருத்தியையும் ஒன்றாகப் பிணைத்துவிடுவதும், பின்னர் கடவுளிடத்தில் அன்பு பூண்டொழுகுபவளுக்கு மட்டும் பொதுநலமும் புனிதத் தன்மையும் கற்பிப்பதும், கடவுளிடத்து நம்பிக்கை கொள்ளாதவனுக்குத் தன்னலம் கற்பிப்பதும், வறிதே தமக்கிருக்கும் மத வெறியைக் காட்டுவதாகுமேயன்றி, உண்மையான நடு நிலையைக் காட்டும் ஒரு சிறந்த பண்பாகாது.

இனிப், பரமதத்தன், தனக்குத் தன் பெற்றோர்களால் மணம் செய்து வைக்கப்பட்ட புனிதவதியாரோடு ஒற்றுமையாகஇருந்து இல்வாழ்க்கையை நடாத்த முடியாதென்பதனாலேயே, வேறொரு பெண்ணைத் தானாகவே மணந்துகொண்டான் என்றும் சொல்லப்படுகின்றது. இந்நிகழ்ச்சி, ஆண் பெண் ஆகிய இருவரையும், அவர்களுடைய உடன்பாடு பெறாமல் பிறரால் செய்து வைக்கப்படும் கட்டாய மணத்தின் கொடுமையை நன்கு விளக்கிக் காட்டுவதாக உள்ளது. அதோடு பரமதத்தனுடைய தன்னலமற்ற சிறந்த குணத்தையும் விளக்கிக்காட்டுவதாகவும் உள்ளது. எப்படியென்றால், தான் இரண்டாவதாக மணந்து கொண்டதன் துணைவிக்குப் பிறந்த பெண்குழந்தைக்குத் தன்னுடைய முதல் மனைவியின் பெயரான புனிதவதி என்பதையே பெயராகச் சூட்டினான் என்பது அவனுடைய உயர்ந்த பண்பையே காட்டுவதாகும். இப்படிப்பட்ட ஒரு நல்லியல்போடு கூடிய ஒருவனைத்தான், பெரியபுராண உரையாசிரியர் தன்னலங்கொண்ட வஞ்சகன் என்று வாய்கூசாது கூறியுள்ளார்.

இனி, "இவள் தெய்வம், இனி இவளோடு வாழ முடியாது" என்று பரமதத்தன் கருதியதனாலேயே, அவன், அவளைவிட்டு வேறொரு பெண்ணைத் தன் வாழ்க்கைத் துணையாக ஆக்கிக்கொண்டான் என்பதும் ஈண்டு கவனிக்கற்பாலது.

> "மானுடம் இவர்தாம் அல்லர்,
> நற்பெருந் தெய்வ மாதல்
> நானறிந்த கன்று பின்பு,
> பெற்ற இம்மகவு........"

அதாவது, பரமதத்தன், புனிதவதியாரை விட்டுப் பிரிந்து, வேறொரு பெண்ணை மணம் செய்துகொண்ட பின்னர், அவளுக்குப் பிறந்த பெண் குழந்தைக்குத் தன் முதல் மனைவியின் பெயரையே சூட்டிய சமயத்தில், தன்னுடைய முதல் மனைவியைப் பற்றி அங்கிருந்தவர்களுக்குக் கூறும்போது, "இவள் மனித இனத்தைச் சேர்ந்தவளல்ல; இவள் ஒரு தெய்வம் என்பதை நான் உணர்ந்ததாலேயே இவளை விட்டுப் பிரிந்து, வேறொரு பெண்ணை மணந்து இக்குழந்தையைப் பெற்றேன்" என்பதாகக் கூறுகின்றான். இதிலிருந்து நாம் அறியக்கூடிய உண்மை என்ன? மக்களினத்தைச் சேர்ந்தவர்கள், தெய்வத்தோடோ அன்றித் தெய்வத்தன்மை பொருந்திய மக்களோடோ சேர்ந்து வாழமுடியாது — வாழக்கூடாது என்பதனையே விளக்குவதாக உள்ளது. எனவே, கடவுளின் தொடர்பு மக்களின் வாழ்க்கையைப் பாழ்படுத்துமேயன்றிப் பண்படுத்தாதென்பது இதனால் பெறப்படும் உண்மையென்று கடைப்பிடிக்க.

இனி, இந்நிகழ்ச்சியில் பேசப்படும் புனிதவதியார், பேய்வடிவம் கொண்டார் என்பதும், மதுரையிலிருந்து கைலாய மலைக்குத் தலையால் நடந்து சென்றார் என்பதும், மீண்டும் தலையாலேயே நடந்து வந்து திருவாலங்காட்டை அடைந்தார் என்பதும் பிறவும், கடவுளுண்மையை நிலைநாட்டுவதற்காகப் புராணங்களைப் பாடுவோரால் புனைந்து கூறப்படும் வழக்கமான பொய்யுரைகளாகும். ஒருவன் தலையால் நடப்பதென்பது இபற்கைக்கு மாறான-முடியாத காரியமாகும். அதிலும் ஒருபெண் தலைகீழாக நடந்தாள் என்று கூறுவது, உண்மையாகவே பெண்உலகத்தை இழிவு படுத்தும் ஒரு நாகரிகமற்ற காட்டு மிராண்டிச் செயலுமாகும்.

ஒருபெண், பேய் வடிவங் கொண்டாள் என்பது இயற்கைக்கு மாறான காட்டுமிராண்டித்தனம் என்று நான் கூறும்போது சில சைவ அன்பர்களுக்குச் சீற்றம் உண்டாகலாம்; ஆனால், புனிதவதியாரின் பேய்வடிவத்தை நேரில் கண்டவர்கள், அதனைக்காண அஞ்சி ஓடினார்கள் என்று சேக்கிழாரே கூறியுள்ளார்.

> "கண்டவர் வியப்புற்றஞ்சிக்
> கையகன்று ஓடுவார்கள்...."

என்பது பெரியபுராணத்தில் காணப்படும் உண்மை. எப்படி ஓடினார்கள்?

(2-ம் பக்கம் பார்க்க)

# ★ மாற்ற வேண்டும்? ★

—✲—

“எங்கேசார் வேலை கிடைக்குது? முன்னோர்கள் தேடிவைத்த நஞ்சை புஞ்சையைவித்து, என்மகனை B. A., வரையிலும் படிக்கவைத்தேன். அவனும் மணியாத்தான் படித்தான். எல்லாவற்றிலும் நல்ல 'மார்க்' வாங்கினான். முதல் 'கிளாஸ்'லே 'பாஸ்' பண்ணினான். பலன் என்ன சார்? போதாக் குறைச்சலுக்கு, ஒரு நல்ல பெண்ணைப்பார்த்து கட்டிபோட்டேன். இந்தத் தள்ளாத வயதிலே, இருவருக்கும் நான் உழைத்துக் கொட்ட வேண்டியதா இருக்கு!”

“என்ன பண்றது முதலியார்வாள், நம்மாலே எல்லாம் ஆயிடுமா? எதற்கும் வேளை வரவேணுங்களா? ஏதோ, உம்கடமையச் செய்துட்டேள்; இனிமே அவன் விட்ட வழியாகுதுண்ணு வெறுமனே இருக்க வேண்டியதுதான்! ஆயாசப்பட்டா ஆகுமா முதலியார்வாள்?”

* * *

“இப்படியே தின்னுட்டு தின்னுட்டு ஊரைச் சுத்திவந்தா, நான் எங்கிருந்தடா கொண்டாந்து வயணமா கொட்டித் தொலைக்கிறது? உங்க அப்பா உயிரோட இருந்த வரைக்கும், என்னமோ படிக்கிறே படிக்கிறேண்ணு பணத்தைப் பட்டினத்திலே பாழ்பண்ணிகிட்டு இருந்தே? உன் கவலையாலேயே, பாயும் படுக்கையுமாகி அவரும் கண்ணை மூடிட்டாரு. இப்பவும் உனக்குப் புத்தி வர வழியைக் காணோம். எங்கேயாவது கடைக்கு போடாண்ணா, நான் படித்திருக்கிற படிப்புக்குகடைக்கா போறதுங்கிறே? வேலை வெட்டி எதுவும் செய்யாமே, எங்கிருந்தடாப்பா வேளை வேளைக்கு மூக்குப் பிடிக்கத் தங்கிறது?”

“எழுந்திருக்கும்போதே ஆரம்பிச்சிட்டாயா அரச்சனையை? இனி இராத்திரிக்குப்படுக்கைக்குப் போற வரைக்கும், உன் வாய் ஏன் ஓயப் போகுது? ஒண்ணு நீயாவது தொலையணும் நானாவது சாகணும். அப்பதான் நம் இருவருக்கும் நிம்மதி ஏற்படும்! படித்த படிப்பையும்மறந்து, மானம் மரியாதையவிட்டு, கடைக்கு வரட்டுமாண்ணு கேட்டா, “உன்னைப்போல கலேஜிலே படிச்சவங்களுக்கு இந்த என்னப்பா வேலை இருக்கப்போவுது? இது ரொம்ப சின்னக் கடையாச்சே' என்கிறார் அந்த கடைக்காரர். நீயோ கடைக்காவது போயேண்டா என்று பிய்த்துப் பிடுங்கிறே! எங்கேயாவது கிணற்றிலே குட்டையிலே விழுந்து சாகவேண்டியது தான்!”

“என்னடா சொன்னாரு? போன காரியம் என்னடா? காயா பழமா? இரண்டாயிர ரூபா உண்டா இல்லையாமா? ஏண்டா விழிக்கிறே? சொன்னதைச் சொல்லேண்டா?”

“இல்லை எஜமான்! கோபிச்சிக்க மாட்டிங்களே!”

“காய்தானேடா! சீக்கிரம் சொல்லித் தொலையேண்டா.”

“காட்டுமிராண்டிக்குக் கூட கொஞ்சம்மனம் இரங்கும். இந்தப்படிச்சவனுக்கு அதுவுங் காணோமேடா? இவன் படித்த படிப்பு இவ்வளவுதானடா? படிச்சவனாச்சேண்ணு இவனுக்குப் பெண்ணைக் கொடுத்ததைக் காட்டிலும், என்பெண்ணைப் பாழுங்கிணத்தில் தள்ளி இருக்கலாண்டா. பணம் கிணம்ணு இன்னொருதரம் இங்கே வராதே. அவங்க அவங்க தலையெழுத்துப்படிதாண்டா எதுவும் நடக்கும்”ணு முடிவு சொல்லிட்டாருங்க!

“பிசினாரிப்பயல்! பணம் கேட்டா நான்படிச்சபடிப்புக்குக்குற்றஞ்சொல்லிட்டானா? கிடக்கிறான்போ! இவன் மட்டும் படிக்காதவனாமா? வக்கில் தொழில்லே, ஊரை ஏச்சி லட்சக் கணக்கிலே பணம் சேர்த்து வைச்சிருக்கானேடா. போதாக் குறைச்சலுக்குவேதாந்திண்ணு வேறெ சொல்லிக்கிறான் — இரண்டாயிரம் ரூபா கொடுக்கிறதுண்ணா நாய் மாதிரியா விழறான். 'இருக்கிறது ஒருபெண்தானே, அது, பூவும் பிஞ்சுமா கண்ணுக்கு அழகா வாழறதை பாப்பமே'ண்ணு பெரும் புத்தியைக் காணோம்! இவனுக்குவேதாந்தம் ஒரு கேடு! இவன் வைச்சிருக்கிற பணத்தை எல்லாம், இவனோடு போட்டா கொளுத்தப் போறாங்க? மடைப்பய! படிபடிண்ணு படிச்சுட்டான்!”

* * *

இவ்வாறு இருக்கும் உரையாடல் பெரும்பாலான படித்தவர் குடும்பங்களில். இது, விதி விலக்கு, ஒருவர் இருவர் விஷயத்தில். வாழ்வில் பேராசை, அது சுலபத்தில் கிட்ட வேண்டுமெனும் வீண் நம்பிக்கை, கிட்டாததால் தோன்றும் சலிப்பு., இதனைப் பிறர்காணாமல் மறைப்பதற்கும்—மனச்சாந்திக்கும் மாயாலோகப் பாராயணம். இவைகளின் கூட்டுச் சரக்காகவே, இன்று படித்துப் பட்டம் பெற்றவர்கள் பலரின் நோக்கும் போக்கும் இருந்து வருகிறது.

ஆண்டவன் அனுப்பிய தூதன் சொன்னது, மார்க்கத்தின் கட்டளை; கடவுள் கனவில் வந்து சொன்னது, பெரியவர்கள் அனுபவத்தில் சித்தியாகப் பெற்றது, என்பனபோன்ற கவைக்குதவாத வாதங்களையெல்லாம் எடுத்துக் கூறி, உலகம் அவர்களிடம் எதிர்பார்க்கும் பணி புரியாது, உலகையும் ஏய்த்துத், தங்களையும் ஏமாற்றிக் கொள்ளுகிறவர்களில் முன்னணியில் நிற்பவர்கள் நமது பட்டதாரிகளேயாவர்.

நேர்மையில் நாட்டமும், உண்மையில் பற்றுதலும், நெஞ்சில் உறுதியும் அற்றுப் போயிருக்கிறார்கள் நமது படித்தவர்கள். தாம் உண்டு, தம் குடும்பமுண்டு எனும் சுயநல வாழ்வில் மூழ்கிப் போய் இருக்கிறார்கள் இவர்கள். மரியாதை காட்டுவது இன்னது என்பதை மறந்து, எதற்கெடுத்தாலும் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாகப் பாசாங்கு செய்கிறார்கள். சென்றுபோன நாட்களின் உயிரற்றுப்போன பழக்கங்

(2-ம் பக்கம் பார்க்க)

## திருமணம்

துறையூர்த் தோழர் J. P. செல்வரத்தினம்—புஷ்பகாந்தா வாழ்க்கை ஒப்பந்தம் 4—9—47ல் தோழர் T. K. R. சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

———

Edited Printed Published by C. N. Annadurai, M. A., at "Dravida Nadu" Press,
317—319 Hodgsonpet Conjeeveram.